Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-–12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-04 | 20-09-2004 | திங்கட்கிழமை | ஓசை -215


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10148)

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தடையாக இருப்பவர்கள் யார்? புலிகள் கேள்வி

## சனாதிபதியின் அறிக்கை குறித்து விசனம்

(கிளிநொச்சி)

**இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குத் தடையானவர்கள் யார்? என்ற கேள்வியினை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் எழுப்பியுள்ளது. அத்தோடு புலிகள் கடினப்போக்கைக் கடைப்பிடிப்பதாகவும், உறுதியான நிலைப் பாட் டைக் கடைப்பிடிக்கவில்லை என்ற சனாதிபதியின் குற்றச்சாட்டுக் குறித்து புலிகளினால் அதிருப்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச்செயலக இணையத்தளம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி,

கடந்த 16ஆம் திகதி சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் விடுதலைப்புலிகள் விட்டுக் கொடுப்பின்றிய கடினப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும், உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வில்லை எனவும் சனாதிபதி தெரி வித்தமை தமிழ் மக்களிடையே அதிர்ச்சியையும், அவநம்பிக்கையை யும், ஏற்படுத்தியுள்ளதாகச் சமாதான செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி விடுதலைப்புலிகள் தமது இடைக்கால தீர்வுத் திட் டத்தை முன்வைத்த நிலையில் முன்னைய பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க தமது நிலைப்பாட் டிலான பதிலை வழங்கியிருந்தார். எனினும் சனாதிபதி பாராளுமன் றைக் கலைத்து ஐக்கிய முன்னணி அரசை அமைத்துக் கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கமுனுகம பொலிஸ் பொறுப்பதிகாரி கான்ஸ்டபிளால் சுட்டுக் கொலை

(கொழும்பு)

நீர்கொழும்பு கமுனுகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவரின் கீழ் வேலை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சப் இன்ஸ்பெக்டர் " ஜெல்றம் றட்பிகோ" நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் அவரது அலுவலகத் தில் வைத்து கான்ஸ்டபிள் ஒரு வரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார். இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரணை கள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் விடுமுறை கோரியதாகவும் இதற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மறுப்புத் தெரிவித்த சமயம் ஏற் பட்ட வாய்த்தகராறையடுதே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும தெரிவிக் கபபடுகின்றது.

ரி-56 ரகதுப்பாக்கி இக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள ளது. கொல்லப்பட்டவரின் தலை யிலும், கழுத்திலும் துப்பாக்கிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் போரை ஆரம்பித்தால் இந்.படை இல.அரசிற்கு உதவும்

## இந்.கடற்படைத்தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் தேரிவிப்பு



(கொழும்பு)

போர் ஒன்றைத் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பித்தால் அதன் போது இலங்கை அரசாங்கத் திற்கே இந்தியப்படைகள் உதவியளிக்கும் என இந் தியக் கடற்படையின் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதியில் இருந்து 16 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டி ருந்த அவர், 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் பங்கேற்ற போதே இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி உட்பட்ட படை உயரதிகாரிகளும் பங்கேற்றனர். இதில் மேலும் உரையாற்றிய அருண்பிரகாஷ் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைப்பிரிவு இந்திய கடற்படைக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எரிக்சூல்ஹெய்ம் புதுடில்லி சென்றார்

நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சூல்ஹெய்ம் புது டில்லி சென்றுள்ளார். இலங்கை யில் பேச்சுக்களை முடித்துக் கொண்டு அப்பேச்சுக்களின் பலா பலன்களை இந்திய அதிகாரி களுக்கு விளக்குவதற்காகவே அவர் நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லி புறப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு விஜயத்தை மெற்கொண்ட சூல் ஹெய்ம் கொழும்பு,யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று அரசுத் தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந் துரையாடியிருந்தார்.

இக்கலந்துரையாடல்களின் பெறுபேறுகள் தொடர்பாக இந்தி யத் தரப்புக்கு விளக்குவதற்கா கவே நேற்றுமுன்தினம் மாலை அவர் கொழும்பில் இருந்து புதுடில்லி புறப்பட் டார். கலந்துரையாடல்கள் பயன் அளிப்பனவையாக இருந் தன. ஆனால், அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்கும் இடையி லான பேச்சுக்களை ஆரம்பிக் கக்கூடிய சூழ்நிலை ஏற்படவில் லையே என்று புதுடில்லி புறப்பட முன்னர் செய்தியாளர்களுக்கு அவர் கருத்து வெளியிட்டார்.

# தற்போதைய பொருளாதார நிலையைப் பொறுத்து எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் ஆர்ப்பாட்டம் செய்திருப்பேன்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ



நாட்டின் பொருளாதாரத் துறையில் தற் போது எற்பட்டுள்ள நிலை, பொருட்களின் விலையேற்றம் என்பன குறித்து தானும் எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் ஆர்ப்பாட்ட ங்களையும் போராட்டங்களையுமே நடத்தி யிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கும் என பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹெக்ட்டர் ஹொப்பேக்கடுவ ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் எத்த கைய எதிர்ப்புகள் நேரிட்டாலும் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டி எழுப்ப தமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார். தற்போது ஏற்பட்டு இருக்கும் விலைவாசி உயர்வைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுமாறு பொதுநலவாய நாடுகளை ஜாதிக ஹெல உறுமய கோரும்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளில் தமிழீழ விடுத லைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுக்கவுள்ளது.

தற்சமயம் கனடாவில் நடைபெறும் பொது நலவாய பாராளுமன்ற சங்கக் கூட்டத்தில் பங்கேற்கும் ஜாதிக ஹெல உறுமய பாராளு மன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் மாத்தி ரமே இலங்கைக்கு நிதியுதவி வழங்கப்படும் என்ற நிலைப்பாட்டையும் பொதுநலவாய நாடுகள் விலக்கிக்கொள்ள வேண்டும் என வும் அவர் கேட்கவுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெ.ஜப்பான் பாதுகாப்பு மாநாட்டில் சிறி.விமானப்படைத் தளபதி பங்கேற்பார்

சிறிலங்காவின் வான்படைத்தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா அமெரிக்காவிலும், ஜப்பானிலும் நடைபெறும் பாதுகாப்புத் துறை மாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜப்பானில் எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதி வரை மாநாடு ஒன்று நடைபெறுகிறது. அதேபோல அமெரிக்காவில் எதிர்வரும் 3ஆம் திகதி பாதுகாப்புத்துறை மாநாடு ஒன்று நடை பெறுகிறது. இதில் 100 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இந்த இரண்டு மாநாடுகளிலும் இலங்கையின் பாதுகாப்புத்துறைக்கு ஏற்புடைய விட யங்கள் குறித்து எயார் மார்சல் டொனால்ட் பெரேரா கவனம் செலுத்து வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக
எமக்கோர் நாடு அவசியம்.
இல்லாவிட்டால் எங்களைப்போல்தான்
நாளைய எமது எதிர்கால சந்ததியும்
துன்பப்படும்; வருத்தப்படும்.

தியாகி லெப்.கேணல் திலீபன்



## வரிவிளம்பரம்

### வியாழ, சனிமாற்றங்கள் உங்களுக்கு எப்படி?

எல்லா ராசி பலன்களும் ரூ15/= எங்கும் விற்பனையாகின்றது. நான் யார்? ஸ்ரீரமணபகவானின் தெய்வீக வரலாறும் அடங்கியது. நூலாசிரியர் - சத்யா 3ஆம் மைல் ஆனைக்கோட்டை. T.P.021,222 2753 கிடைக்குமிடம்:- ருக்மணி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு(5112)

### தவறிவிட்டது

இராமச்சந்திரன் சந்திரகுமார் என்பவரின்அடையாள அட்டைகள், உள்ளடங்கிய கைப்பை புளியங்குளத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் 18.09.2004 அன்று தவறவிடப்பட்டுள்ளது. N.I.C - 79321336V இதனைக் கண்டெடுத்தவர்கள் யாழ். அருவி குளிரகம், கந்தசாமி கோவில் முன்பாக ஒப்படைத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். (5113)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. தொலைபேசி எண்.021-2285750 (சி-10350)

### திருநாள் திருப்பலி

அளம்பில் கடற்கரையிலுள்ள அன்னை வேளாங்கன்னி ஆலய திருநாள் திருப்பலியும், திருச்சொரூபப்பவனியும் நாளை காலை 7.00 மணிக்கு அளம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (20)

# தியாகி திலீபனின் நினைவு நாளையொட்டி 20 பாடசாலைகளில் வினாவிடைப் போட்டி

(அக்கராயன்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டுநினைவு நாளை முன்னிட்டு அரசியல்துறையினரின் அனுசரணையில், அக்கராயன் பிரதேசத்தில் இயங்கி வரும் ஆற்றற்கலை, சமூகசெயன் முனைப்புக் குழுமத்தினரால் பொது அறிவு வினாவிடைப் போட்டி கரைச்சிக் கோட்டத்திலுள்ள 20 பாடசாலைகளில் 10,11 ஆம் தர மாணவர்களிற்கு கீழ்ப்பிரிவின் கீழும், 12,13ஆம் தர மாணவர்களிற்கு மேற் பிரிவின் கீழும் நடாத்தப்படும். இப்போட்டியில் சித்தியடைவோர் பாடசாலை ரீதியாக மூவரும், கோட்ட மட்ட ரீதியாக மூவரும் தெரிவு செய்யப்பட்டு 26.09.2004 அன்று தியாகி திலீபனின் இறுதி நாள் நிகழ்வில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

ஆற்றற்கலை,சமூகசெயன் முனைப்புக் குழுமம் அக்கராயன் பிரதேசத்தில் கலைத்துறை ரீதியான கற்கைகளை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

எம்மையும் எமது மக்களையும் ஏமாற்றி விடலாம் என அன்று ஆட்சியில் இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தானவும் இந்தியா அரசும் நினைத்துத் தம்மைத் தாமே ஏமாற்றியது. அதேபோல் இன்றும் இலங்கை அரசும், உலக நாடுகளும் எம்மையும் எம் மக்களையும் ஏமாற்றலாம் என நினைக்கின்றது. ஆனால் எமது மக்கள் உறுதியோடும் உணர்வோடும் இருக்கும் வரையில் எமது மக்களை ஏமாற்றி விட முடியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் தெரிவித்தார். மல்லாவியில் திலீபனின் 17ஆம் ஆண்டு, 5ஆம் நாள் நினைவு நிகழ்வு மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்றபோது அங்கு நினைவுரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். காலை 9.00 மணிக்கு ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் இசைப்பிரியன் தலைமையில் இந் நினைவு நிகழ்வு இடம்பெற்றது. பொதுச்சுடரினை மல்லாவி வர்த்தக சங்கச்செயலாளர் ந.தனுராஜ் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரன் லெப்டினன்ட்ஒறிஸ் அவர்களின் தந்தையார் தர்மகுலசிங்கம் ஏற்றி வைத்தார். மலர்மாலையினை மல்லாவி மருத்துவமனை வைத்தியர் திருமதி ஏகாம்பரமூர்த்தி தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியர் சிவலிங்கம் ஆகியோர்ஏற்றி வைத்து மலர்மாலையினையும் அணிவித்தனர். மலர் வணக்கமும் இடம்பெற்றது. நிகழ்வில் நினைவுரையினை முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சின்னண்ணன் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் தனியார் கல்வி நிலைய மாணவர்கள், ஆசிரியர்கள்,வர்த்தக சங்கஉறுப்பினர்கள். பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24,15,இ)

## குளவி கொட்டியதால் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

குளவி கொட்டியதன் காரணமாக இருவர் கிளி.மாவட்ட வைத்தியசாலை அவசர நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளியன்று கிளிநொச்சி கனகபுரம் முதலாம் பண்ணையில் நிகழ்ந்துள்ளது. பலத்த காற்றின் காரணமாக பனையிலிருந்த குளவிக்கூடு உடைந்து விழுந்தது. இதனால் குளவிகள் கலைந்து அருகில் நின்றவர்கள் மற்றும் வீதியால் சென்றவர்களுக்கு கொட்டியுள்ளன.

இச்சம்பவத்தில் இருவருக்கு மட்டும் குளவிகள் கடுமையாகக் கொட்டியதில் அவர்கள் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை மேற்கொள்ளப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. க.மனோகரலிங்கம் (வயது58) செ.பிரணவதேவி (வயது 56) ஆகிய இருவருமே குளவி கொட்டியதன் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்பவர்களாவர். (சோ)

## முல்லை மாவட்ட தபாலலுவலகம் இயங்குவதற்கு இடமில்லை

### -தபாலதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவில் முல்லை மாவட்ட தபாலலுவலகம் இயங்கு வதற்கு கட்டடம் இல்லையென முல்லை மாவட்ட தபாலதிபர் தெரி வித்தார்.

இது விடயமாகத் தெரியவருவதாவது இவ்வலுவலகம் இவ்வருட முற்பகுதியில் திரு.மரியரத்தினம் என்பவரது வீட்டில் இயங்கி வந்ததது. தற்போது அவருக்கு அந்த வீடு தேவைப்படுவதால் இடத்தை விடுமாறு அவர் பணித்துள்ளார். இம் மாதம் முடிவடைந்ததும் அந்த இடத்தை விடுமாறு அவா கோரியுள்ளார். இதனால இவ்வலுவலகத்தை இயங்குவதற்காகப் பல வீடுகளை கேட்ட போதும், சம்பந்தப்பட்ட பலருடன் கதைத்த போதும தமக்கு இடம் இன்னமும் கிடைக்கவில்லையென்றும், அரசாங்கமும் கட்டுவதற்கான நிதியினை இதுவரை ஒதுக்கீடு செய்யவில்லையென்றும் அவர் மேலும்தெரிவித்தார்.(20)

## காலபோக நெற்செய்கைக்கான கமக்கார அமைப்பினர் கலந்துரையாடல்

கடந்த வெள்ளிக்கிழமையன்று கமக்கார அமைப்புடனான கலந்துரையாடல் சிலாவத்தை கமக்கார அமைப்புத் தலைவர் சி.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் காலபோக நெற்செய்கை தொடர்பாகவும்,முடவன்குளம் உலக உணவுத் திட்டத்தில் புனரமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

01.10.2004 தொடக்கம் 28.03.2005 வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்றும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பெரும்போக உத்தியோகத்தர் செல்வி.சு.இராசலட்சுமி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லைப்பிரதேச இணைப்பாளர் றொபேட், விவசாய போதனாசிரியர் செல்வி சங்கீதா சரவணமுத்து, கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், கிராம அலுவலர் எஸ்.சுமதி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (20)

### கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

கோணாவில் வீதி , அக்கராயனைச் சேர்ந்த சண்முகராசா-சுரேஸ் (803544069V) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு அக்கராயன் காவல்துறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார். (15)

### அலுவலக அ.அட்டை

(அக்கராயன்)

அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு- நவீன முறையில் கணினி மயப்படுத்தப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப் படப்போவதாக அக்கராயன் வைத்தியசாலை செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (இ)

## கொழும்பு லயன்ஸ் கழகம் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(கண்டாவளை)

போரினால் பாதிக்கப்பட்ட கண்டாவளை மகாவித்தியாலய மாணவர்களுக்கென கொழும்பு லயன்ஸ் கழகம் ஒரு தொகுதி கற்றல்



உபகரணங்களை வழங்கியது. கழகத்தலைவர் தில்லைநாதன் அவர்கள் பாடசாலை அதிபர் சி.சிறீதரன் அவர்களிடம் கற்றல் உபகரணங்களை வழங்குவதனையும் அருகில் கெனியூட்சன் சேதுபதி ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## -வித்தியானந்தாக்கல்லூரியை-

## தேசிய பாடசாலையாக மாற்றக்கோரி உதவி அரச அதிபரிடம் வேண்டுகோள்

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியை முல்லை மாவட்டத்தின் தேசிய பாடசாலையாக மாற்றவேண்டும் என கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபரிடம் முள்ளியவளைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது தமது பாடசாலையே கல்லூரியாக இருப்பதனாலும், பெருமளவான வைத்தியர்களை, பொறியியலாளர்களை, ஆசிரியர்களை, கணக்காளர்களை இப்பாடசாலை உருவாக்கிச் சிறந்து விளங்குவதாலும் தமது பாடசாலையைத் தேசியபாடசாலையாக மாற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததுடன், கடந்த வியாழக்கிழமை கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் செயலகத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் அபிவிருத்திச் சங்கக் கலந்துரையாடலில் இதற்கான மகஜரையும் உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர். (20)

### முல்லைத்தீவு தேசிய எழுச்சி பேரவையின் கலந்துரையாடல்

முல்லை மாவட்ட கடற புலிகளின் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து ஊரக தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்தக் கலந்துரையாடல் கடந்த 16ஆம் திகதி அன்று முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.ம.ரங்கன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் இப்பிரதேசத்திற் குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரதேசப் பொறுப்பாளர்கள்,கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ண பிள்ளை ஊரக, தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (20)

## அக்கராயன் வைத்தியசாலையில் இருமாதங்களில் 6305பேருக்கு சிகிச்சை

(அக்கராயன்)

அக்கராயன் அரசினர் வைத்திய சாலையில் கடந்த இருமாதங்களில் வெளிநோயாளர்கள் பிரிவில் 6305நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் ஆடி மாதத்தில் காய்ச்சல் காரணமாக 229பேரும், மலேரியாவினால் 49பேரும், வயிற்றோட்டம் காரணமாக 43பேரும், நாய்க்கடிக்கான சிகிச்சையினை 04பேரும், தொற்றுநோய்க்கான சிகிச்சையினை 63 பேரும், விபத்துக் காயங்களுக்கான சிகிச்சையினை 347பேருமாக 2689பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆவணி மாதத்தில் காய்ச்சல் காரணமாக 222பேரும், மலேரியா காரணமாக 136பேரும், வயிற்றுழைவு காரணமாக27பேரும் நாய்க் கடிக்கான சிகிச்சையினை 04பேரும், தொற்று நோய்களுக்காக 57பேரும், விபத்துக் காயங்களுக்கு 341பேருமாக 3616பேர் சென்ற மாதம் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். (இ)

## மாவீரர் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு மாவீரர் மண்டட திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணிக்கு மராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

மாவீரர் செயற்பாட்டுக்குழு உறுப்பினர் சசிக்குமார் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரரது பெற்றோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மாவீரரது மண்டப அடிக்கல்லினை வடமராட்சி கிழக்குக் கோட்டக்கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழேந்தியும், வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுத்தலைவரும் நாட்டிவைத்தனர். இந் நிகழ்வில் சிறப்புரையினை வடமராட்சி கோட்ட கல்விக்கழகத்தைச் சேர்ந்த தாயகன் நிகழ்த்தினார். (தீ)

# பலஸ்தீன ஆதரவுக் கொள்கையிலிருந்து எந்தச் சூழலிலும் இந்தியா பின்வாங்காது

## இணை அமைச்சர் அகமது!

(ஜெருசலேம்)

**எந்தச் சூழ்நிலையிலும் அரபாத்துக்கும், பலஸ்தீன மக்களுக்கும் அளித்துவரும் ஆதரவுக் கொள்கையிலிருந்து இந்தியா பின்வாங்காது என இந்தியவெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது தெரிவித்துள்ளார்.**

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் மட்டுமே பலஸ்தீனப் போராட்டத்தின் தலைவராக விளங்குகிறார் என்று இந்தியா குறிப்பிட்டுள்ளது. அவருக்கும், சுதந்திர நாடு கோரிவரும் பலஸ்தீன மக்களுக்கும் இந்தியாவின் ஆதரவு தொடரும் என்று இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் அகமது கூறியுள்ளார்.

இரண்டு நாள் சுற்றுப்பயணமாகப் பலஸ்தீனம் சென்றுள்ள அகமது, ரமலாவில் அரபாத்தை வெள்ளிக்கிழமை சந்தித்த பிறகு நிருபர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தச் சூழ்நிலையிலும் அரபாத்துக்கும், பலஸ்தீன மக்களுக்கும் அளித்துவரும் ஆதரவுக் கொள்கையிலிருந்து இந்தியா பின்வாங்காது எனவும், அராபத்தை தற்போது காவலில் வைத்திருப்பது சட்ட விரோதமானது எனவும் அகமது கூறியுள்ளார்.



ஜெருசலேத்தில் நடைபெறும் வாராந்தக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் இஸ்ரேலிய துணைப்பிரதமர் எகுட் ஒல்மர்ட்டும் அதை அவதான[illegible]தும் பிரதமர் ஏரியல் ஷரோனும்.

# பின்லேடன் எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது முஷாரப்

(இஸ்லாமாபாத்)

அல்-ஹைதா இயக்கத்தலைவர் பின்டேலன் எங்கு இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

தீவிரவாதத்தின் மூலம் உலகை அச்சுறுத்தி வருபவர் ஓசாமா பின்லேடன். அல்-ஹைதா இயக்கத் தலைவரான அவரைத் தேடி அமெரிக்கா தீவிர வேட்டை நடத்தி வருகிறது. இதனால் பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியோடி பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இருக்கும் மலைப்பகுதியில் பதுங்கி வாழ்வதாகத் தகவல்கள் வருகின்றன.இதனால் அந்தப் பகுதியை பாகிஸ்தான் இராணுவமும் சோதனை போட்டு வருகிறது. அல்-ஹைதா இயக்கத்தைச் சேர்ந்த பலரை கைது செய்தும் இருந்தது.

அமெரிக்காவில் சனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கின்றது. இந்தத் தேர்தலில் ஜோர்ஜ் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். அதனால் தேர்தலுக்கு முன்பே பின்டேலனைப் பிடித்து விடவேண்டும் என்பதில் ஜோர்ஜ் புஷ் உறுதியாக இருப்பதாகவும், இதற்கு பாகிஸ்தான் உறுதுணையாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் 6நாள் சுற்றுப் பயணமாக பாகிஸ்தானின் சனாதிபதி முஷாரப் நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். இதையொட்டி முஷாரப் பாகிஸ்தான் செய்தி நிறுவனம் ஒன்றிற்குச் சிறப்புப்பேட்டி அளித்தார்.

இந்தப் பேட்டியின் போது முஷாரப்பிடம் "பின்லேடனை பிடித்து ஜோர்ஜ் புஷ்சுக்கு தேர்தல் பிரச்சாரப் பரிசாக வழங்கப்போவதாகக் கூறப்பட்டதே?" என்று கேட்கப்பட்டது. இதற்கு முஷாரப் பதில் அளிக்கையில் "அப்படி ஒரு கூற்று நிலவியது. நான் அப்படிக் கூறவில்லை. பின்லேடன் எங்கு இருக்கிறார். என்பது எங்களுக்குத் தெரியாது" என்று கூறினார்.

அல்-ஹைதா தீவிரவாதிகளை ஒழிப்பதில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் இராணுவம் உதவி புரிந்து வருகின்றது. கடந்த ஜூலை மாதத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் 70 பேர்களையும், அமெரிக்கா 30 பேர்களையும் பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



புளோரிடாவில் ஏற்பட்ட ஐவான் என்ற சூறாவளியால் சேதமடைந்த வீடொன்றுக்கு முன்பாக சைக்கிளில் சவாரிசெய்யும் ஒருவரையும், அங்கு ஏற்பட்டுள்ள பனியை அகற்றிப் பாதை சீர்செய்யப்படும் வரை காத்துநிற்கும் வாகனங்களையும் காணலாம்.

# 48 மணிநேர காலக்கெடு கைதிகளின் தலைகள் துண்டிக்கப்படும்

(கெய்ரோ)

'மூன்று பிணைக்கைதிகளின் தலைகளை 48மணிநேரத்தில் துண்டிப்போம்' என்று ஈராக் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த கென்னத் பிக்லே, அமெரிக்காவைச் சேர்ந்த ஜேக் ஹென்ஸ்லே, யூஜின் ஆர்ம்ஸ்டாங் ஆகிய 3பேரை ஈராக் தீவிரவாதிகள் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

ஈராக்கைச் சேர்ந்த பெண்கைதிகளை 48மணி நேரத்தில் விடுவிக்காவிட்டால் மூன்று பணயக் கைதிகளின் தலைகளைத் துண்டித்து விடுவோம் என்று அவர்கள் கெடு விதித்துள்ளனர்.

3பேரின் கைகளையும், கண்களையும் கட்டித்தரையில் உட்கார வைத்த நிலையில் கறுப்புநிற முகமூடி உடையணிந்த தீவிரவாதி ஒருவர் எச்சரிக்கைக் கடிதத்தை வாசிப்பது போன்ற காட்சி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அரபு தொலைக்காட்சியான 'அல்-ஜசீரா'வும் இந்த ஒளி நாடாவின் சில காட்சிகளை நேற்று முன்தினம் ஒளிபரப்பியது.

பிணைக்கைதிகளில் ஒருவரான ஹென்ஸ்லேயின் தலையில் கைத்துப்பாக்கி முனையைத் தீவிரவாதி அழுத்தும் காட்சியும் அந்த ஒளி நாடாவில் இடம்பெற்றிருந்தது.

# ஈராக்கின் பலூஜா நகர் மீது குண்டு வீச்சு நீடிக்கிறது

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள பலூஜா நகர் சன்னி முஸ்லிம்கள் நிறைந்த பகுதி. இங்குதான் அமெரிக்க இராணுவத்துக்கு எதிராக கிளர்ச்சிக்காரர்கள் கடும் தாக்குதலைத் தொடுக்கிறார்கள். எனவே அமெரிக்கப் போர் விமானங்கள் அந்த நகர் மீது குண்டு மழை பொழிந்து வருகிறது. இருப்பினும் தீவிரவாதிகளும் தொடர்ந்து கொரில்லாத் தாக்குதல் நடத்துகிறார்கள். ஈராக் போரில் அமெரிக்க வீரர்கள் 1,000 இற்கும் மேல் பலியாகி இருக்கிறார்கள். இதில் பலூஜா நகரில் மட்டும் 778 பேர் இறந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பலூஜா நகரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கப் படை தீவிர தாக்குதல் நடத்துகிறது. நேற்று போர் விமானங்கள் அணி அணியாகச் சென்று குண்டுகளை வீசியது. உயிரிழந்தோர் எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

# உயிரைப் பலிவாங்கிய ரஷ்யப் பள்ளித்தாக்குதல் செச்னியத் தீவிரவாதிகள் பொறுப்பேற்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அண்மையில் 339 உயிரைப் பலிவாங்கிய பெஸ்லான் நகரப் பள்ளிச் சம்பவத்துக்கு பொறுப்பேற்பதாக செச்னியத் தீவிரவாதக் குழுத் தலைவர் ஷமில் பசயேவ் (39) இணையத்தளம் ஒன்றில் தெரிவித்துள்ளார். இது குறித்த தகவல் 'கவ்கஸ்சென்டர் காம்' என்ற தீவிரவாதிகளுக்குச் சொந்தமான இணையத்தளத்தில் வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ளது.

விடுமுறைக்குப் பின் பெஸ்லான் நகரப் பள்ளித் துவக்க தினத்தன்று குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை செச்னியத் தீவிரவாதிகள் பள்ளி வளாகத்திற்குள் பிணையாளிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். இரண்டு தினங்களாக நடைபெற்ற இந்தச் சம்வத்தில் ரஷ்யப் படைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் குழந்தைகளும் மற்றும் பெற்றோர்களுமாக மொத்தம் 339 பேர் கொல்லப்பட்டனர். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் குழந்தைகள் ஆவர். செச்னியாவிலிருந்து ரஷ்யப் படைகள் வாபஸ் பெறவேண்டும். செச்னியாவில் 5 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளுக்கு ரஷ்ய அரசு செவிசாய்த்தால் பிணையாளிகளை உடனடியாக விடுதலை செய்வதாகக் கோரிக்கை விடுத்தோம். ஆனால் ரஷ்யப் படைகள்தான் முதலில் பள்ளியில் நுழைந்து தாக்குதலைத் தொடங்கின என பசயேவ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பாக்தாத்தில் அமெரிக்காவினதும் பிரிட்டனதும் படைவீரர்கள் இருவர் கடத்திச் செல்லப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து வெளியேறும் வேறொரு அமெரிக்கப்படைவீரர்.

## வங்க தேசத்தில் குண்டுவெடிப்பு பத்துப்பேர் படுகாயம்


வங்கதேசத் தலைநகர் டாக்காவில் 5மாடிக் கட்டடத்தில் சனிக்கிழமை சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 10பேர் காயமடைந்தனர். இவர்களில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

சுத்ராபுர் பகுதியில் அதிகாலையில் இந்தக்குண்டுவெடித்தது. ஒரு குண்டு வெடித்ததா? அல்லது பல குண்டுகள் வெடித்தனவா? என்பது தெரியவில்லை. குண்டு வெடிப்பு நிகழ்ந்த வீட்டுக்குள் இருந்த அனைவரும் வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். காயமடைந்த அனைவரும் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# 'இராணுவத் தளபதிப் பதவியைத் துறப்பேன்' முடிவை மாற்றிக் கொண்டார் முஷாரப்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் இராணுவத் தளபதியாகவும், சனாதிபதியாகவும் முஷாரப் இருந்து வருகிறார். ஒருவருக்கு ஒரு பதவி என்ற அடிப்படையில் இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து விலகப் போவதாக முஷாரப் அறிவித்திருந்தார். ஆனால் திடீர் என்று அவர் தனது நிலையை மாற்றிக் கொண்டார். சமீபத்தில் முஷாரப் அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து விலகமாட்டேன். பாகிஸ்தான் மக்களில் பெரும்பாலானோர் நான் அந்தப் பதவியிலே நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்" என்று கூறியிருந்தார். முஷாரப்பின் இந்த அறிவிப்புப் பற்றி அமெரிக்கா முதலில் எந்தக் கருத்தும் கூறாமல் இருந்தது. இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செய்தி தொடர்பாளர் ஆடம் எரிலே நேற்றுக் கருத்து வெளியிட்ட போது "இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து முஷாரப் விலக வேண்டும். இந்தப் பிரச்சினை புதிது ஒன்றுமில்லை. முஷாரப் அமெரிக்கா வரும் போது இது பற்றி அவரிடம் பேசுவோம்" என்று கூறினார்.



கென்யாவில் பெண்களின் பாரம்பரிய கொண்டாட்டத்திற்கு அரசு தடைசெய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் தமது வீட்டுப் பாவனையிலுள்ள கத்திக்கு முன்னால் அமர்ந்திருக்கும் கென்யப் பெண்கள்.

# தெங்கு பயிர்ச் செய்கை அபிவிருத்திக்கு

# முல்லை.மாவட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

**முல்லை மாவட்டத்தில் தெங்குச் செய்கையை அபிவிருத்தி செய்யும் வகையிலான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலக அனுசரணையுடன் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரால் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

ஐம்பது வருடங்களுக்கு மேல் நின்று பாரியளவில் பயனதரக்கூடிய தென்னை மரங்கள் குறித்த போதிய அறிவை மக்களிடையே உருவாக்கி அதனூடாக உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. விதை தேங்காய் தெரிவு, நாற்றுமேடை அமைத்தல், நடுகைப் பராமரிப்புப் போன்ற முக்கியவிடயங்களில் மக்கள் அதிக கவனம் செலுததாமையினால் தென்னையிலிருந்து பெறக்கூடிய முழுப்பயனையும் அடையமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனைக் கவனத்தில் கொண்டு கிராம ரீதியில் குடியிருப்பாளர்களுக்கு இது பற்றிய முழுமையான பயிற்சிகளை வழங்கும் ஒழுங்கு முறையில் முதற்கட்டமாக விசுவமடு இளங்கோபுரம் கிராமத்தில் முல்லை. மாவட்ட த.பொ.மே.நி அனுசரணையுடன் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரால் முழுமையான பயிற்சிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இதில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

மேலும் இந்தப் பயிற்சி வகுப்பில் த.பொ.மே.நி.மாவட்ட செயலர், விசுவமடுப் பிரதேச இணைப்பாளர், உடையார்கட்டு விவசாயப் போதனாசிரியர்,ஊரக வளர்ச்சித்திட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க முல்லை. மாவட்டத்தில் பரவலாக தென்னையில் 'மைற்ஸ்' நோயின் தாக்கம் தொடர்ந்து காண படுகிறது. இதனால் தேங்காய உற்பத்தி தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (08)

## குடிநீர் வழங்கல்

(அக்கராயன்)

அக்கராயன் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக தற்போது கொள்கலன்கள் மூலம் பாடசாலைகள், பொது இடங்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள் போன்ற இடங்களில் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.



யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியுடன் பாஜ் நிறுவனத்தினரால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவு மக்கள் மற்றும் வவுனியா, மன்னார் அகதிமுகாம்களிலிருந்து கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சொந்தக் காணிகளில் குடியமர்ந்த 190 குடும்பத்தினருக்கு உலர் உணவு அற்ற பொருட்கள் கடந்தவாரம் கரைச்சிப்பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பெற்றதனைப் படத்தில் காணலாம். (படம்.சோதி)

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு மாங்குளத்தில் கிராம தரிப்புடன் கருத்தூட்டல்

மாங்குளம் மாதர் சங்கத்தினால் கிராம தரிசிப்பும் கருத்தூட்டல் நிகழ்வும் இடம்பெற்றது. கடந்த வெள்ளிகிழமை இடம்பெற்ற இந்நிகழ்வு தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையொட்டி ஏற்பாடாகியிருந்தது.

தேசியக் கொடியை மாங்குளம் கிராமப் பொறுப்பாளர் அணி அழகன் ஏற்றி வைத்தார். 2ஆம் லெப்டினன்ட மாலதியின் திருவுருவப்படத்திற்கான சுடரினை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி ஏற்றிவைத்து மலர்மாலையை அணிவித்தார். தொடர்ந்து பொதுச்சுடரினை மாங்குளம் மத்தி மாதர்சங்கத்தலைவி ஞானகி ஏற்றிவைத்தார். பின் கற்குவாரி, துணுக்காய் ஆகிய இரு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு வீடு வீடாகச் சென்று பெண்கள் பிரச்சினை ஆராயப்பட்டு அவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நடைபெற்றது.

அன்றைய தினம் பி.பகல் 3.00மணிக்கு மாங்குளம் மகா.வி.மண்டபத்தில் பெண்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வும், ஆய்வும் நடைபெற்றது. இதில் கருத்துக்களை ஒட்டுசுட்டான் மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் யோகன், மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர். திருச்செல்வம், முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் வேழினி, ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் பெருமளவான பெண்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகள் அனைத்தும் மாங்குளம் மாதர் சங்கத்தலைவி குபுஸ்பராணி தலைமையில் நடைபெற்றது தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு இந்நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)

# தூக்குப் போட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி ஜெயபுரம் குடியிருப்புத் திட்டவீடொன்றில் தூக்குப் போட்ட நிலையில் ஆணின் சடலமொன்று முழங்காவில் காவல் பணிமனையினரால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்; வீடொன்றின் உட்பகுதியிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக கடந்த 17ஆம் திகதியன்று முழங்காவில் காவல் பணிமனையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் துறையினர் வீட்டின் கதவைத் திறந்த பொழுது கழுத்தில் சுருக்கிட்டு அழுகிய நிலையில் ஆணின் சடலம் இருப்பதைக் கண்டு நீதியாளருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து ஸ்தல விசாரணை யினை மேற்கொண்ட ஜெயபுரம் நீதிமன்ற நீதியாளர் சடலத்தினை பார்வையிட்டு மேல் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

மேற்படி சடலம் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சடலபரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.பெரிய காட்டொமுங்கை ஜெயபுரத்தைச் சேர்ந்த இராமநாதன் சிவகுமார் (ராஜா) வயது 27 என்பவருடைய சடலமே இது என தற்போது இனங்காணப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (சோ)

– கஷ்ரப்பட்ட மக்களுக்கு –

# துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உணவல்லாத பொருட்கள் வழங்கல்

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 500 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்களை யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் சீரான முறையில் வழங்குவதற்கு கிராம அலுவலகர்கள் ஊடாக மிகவும் கஷ்ரப்பட்ட மக்களின் விபரப்பட்டியலைத் தயாரித்து வருகின்றனர்.

இதன் காரணமாக இந்தியாவிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள், இடம்பெயர்ந்த பாதிகப்பட்ட மக்கள், வயதுமுதிர்ந் தோர், குறைந்த வருமானம் கொண்டவர்கள், குடும்பத்தலைவரை இழந்த குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (24)

# பனை வெல்லத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்கக் கோரல்

(பூநகரி)

பூநகரி மட்டுவில் நாடு பகுதியில் "பனை வெல்லத் தொழிற்சாலையை" மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட வலம்புரி இராணுவ நடவடிக்கைக்கு முன்னா இப்பகுதியில் இத்தொழிற்சாலை இயங்கி நாள் ஒன்றிற்கு 200 கிலோவிற்கு மேல் பனைவெல்லத்தை உற்பத்தி செய்தமை குறிப்பிடத்தக்கதுஎனவே எமது உள்ளூர் வளத்தைப் பயன்படுத்தி பனை வெல்லத்தை உற்பத்திசெய்ய தமிழீழ பொருண்மிய நிறுவனம் உதவி புரிய வேண்டும் எனப் பொது மக்கள மேலும் தெரிவித்துள்ளனர். (34)

# வவுனியாவில் 3,76,402ச.மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும்

-அரச செயலக புள்ளி விபரம் தெரிவிப்பு-

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தால் புதைக்கப்பட்ட மிதி வெடிகளினை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன .UNDP நிறுவனத்தின்கீழ் மேற்படி பணிகள் இடம் பெறுகின்றன.

இதுவரை வவுனியாமாவட்டத்தில் 87ஆயிரத்து 16 மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் 3இலட்சத்து 76 ஆயிரத்து 402 சதுரமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதுவரை 1761மிதி வெடிகளும் 03வாகனத் தகர்ப்பு கண்ணி வெடிகளும், 2ஆயிரத்து 850UXOகளும் அழிக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியா அரச செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன

# சனசமூக நிலையம் திறப்பு

வட்டுவாகல் உதயசூரியன் சனசமூக நிலையம் கடந்த 15-ஆம் திகதியன்று பிற்பகல் 3 மணிக்கு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர். ச.கனகரத்தினம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக இந்த நிகழ்வின் பொதுச் சுடரினை ஆனந்தபுரம் சிறிமகாவிஷ்ணு தேவாஸ்தான சிவசிறி இராமசாமிக் குருக்களும், மங்கல விளக்கினை முல்லை நகரப்புனரமைப்புக் குழுத்தலைவர் இராசையாவும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைப்பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தனும், கழகக் கொடியினை சனசமூக நிலையத்தலைவர் வீ.சிவானந்தராசாவும் ஏற்றிவைத்தனர்.

பெயர்ப்பலகையினை கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை திரைநீக்கம் செய்து வைத்தார்.

வரவேற்புரையினை ஒதியமலை அ.த.க பாடசாலை அதிபர் ஜீவஜீலன் நிகழ்த்தினார். உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் வீ.சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கருத் துரைகளை சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி. தவமணி, முல்லை நகரப்புனரமைப்புக் குழுத்தலைவர் இராசையா, முல்லை மாவட்ட தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர்கமல், கரைத்துறைப்பற்றுப் பிரதேச விசேடஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் வழங்கினார்.

நன்றியுரையினை சனசமூகத் தலைவர் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பெருமளவான கிராம மக்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.(20)

# செம்மலை கிராமத்தை கட்டியெழுப்ப நெக்கோட் திட்டத்தினூடாக நடவடிக்கை

செம்மலைக்கிராமத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளது. அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் அக்கிராமத்தரிசிப்பு இடம்பெற்றது.

நெக்கோட் திட்டத்தினூடாக இக்கிராமத்தை கட்டி யெழுப்புவதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

செம்மலைக் கிழக்கிற்கு ரூபா 40 இலட்சமும் செம்மலைக்கு ரூபா 70 இலட்சமுமாக மொத்தம் 110 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் கிராமிய செயலகங்கள், கிராமஅலுவலரின் செயலகங்கள் கிராம மக்களின் பயன்பாட்டுக்கான கட்டடங்கள் போன்ற பலவேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அ.சோதிநாதன் தெரிவித்தார். (20)

# கல்விளான் பகுதியில் யானைகள் அட்டகாசம்

துணுக்காய் கல்விளான் பகுதியில் காட்டுயானைகள் மக்களின் குடிமனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருவதனால் அங்குள்ள மக்கள் பெரும் பயபீதியுடன் இருந்து வருகின்றனர். அத்துடன் யானைகள் பயன் தருமரங்களான வாழை, தென்னை ஆகியவற்றையும் அழித்து வருவதாக அங்குள்ள மக்கள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர்.(24)

# தமிழீழம் மறவாத-தவப்புதல்வன் திலீபன்




சாவினில் வாழ்வு பெற்ற
சரித்திர நாயகருள்
காவிய நாயகனாம்
திலீபனின் நாட்கள் இவை.

இந்தியத்தின் வஞ்சகத்தை
இடித்துரைக்கச் சென்ற திலீபன்
பந்தங்கள் சூழ்ந்திருக்க
பசிகிடந்து உயிர் துறந்தான்.

புலிகளை எலிகளாக எண்ணி
பலிகொள்ள வந்தவர்கள்
நிலை குலையா தியாகி முன்
தலை குனிந்து நின்றார் அன்று.

வெண்புறா வேடமிட்டு
வன்முறைகள் புரிந்தவர்கள்
பார்த்தீபன் அகிம்சை கண்டு
பதைபதைத்து போனார் அன்று.

தமிழீழம் மறவாத
தவப்புதல்வன் திலீபனே
விலையிலா உன்தியாகம்
வீண் போகாது எம்மண்ணில்.

**முத்தையனூர்.ப.துஷ்யந்தன்**

# இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களை கட்டுப்படுத்த பொலிசார் முயற்சி எடுப்பதில்லை

## -பொது மக்கள் தரப்பில் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இருபாலை- கோண்டாவில் வீதியில் இரவு நேரங்களில் இளைஞர்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தினமும் இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக மது அருந்தி விட்டு உந்துருளிகளில் திரியும் இளைஞர் குழுக்கள் வீதியால் செல்வோரைத் தாக்குவதாகவும், வழிமறித்து அச்சுறுத்தல் விடுப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இளைஞர் குழுக்கள் இரவு நேரத்தில் வீதிகளில் புரியும் இவ்வாறான அடாவடித்தனங்களால் ஆத்திரமடைந்த மக்கள் கோப்பாய் சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தில் பல தடவைகள் முறையிட்டும் பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்காமையையிட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# வடமராட்சி கிழக்கில் மின் வழங்கலுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள கிராமங்களுக்கான மின் விநியோகத்தை வழங்குவதற்கென ஆசிய அபிவிருத்திவங்கி 2 கோடி ரூபா நிதியை வழங்கி யுள்ளது.

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேச கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்யப் படாததால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் எதிர்கொண்ட சிக்கல் களை கருத்திற் கொண்டே ஆசிய அபிவிருத்தி வங்கி இந் நிதியுத வியை வழங்கியுள்ளது.

இந்த நிதி மூலம் வடமராட்சி கிழக்கின் பொற்பதி, குடத்தனை, மணற்காடு, அம்பன் ஆகிய பகுதிகளுக்கு மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

# குழாய் மூலம் குடிநீர் வழங்க யாழ்.அரச செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறை அரியாலை போன்ற பிரதேசங்களுக்கு குழாய்கள் மூலமாக குடிநீரினை விநியோகம் செய்ய யாழ். அரச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடற்கரையை அண்மித்துக் காணப்படும் மேற்படி பிரதேச வாழ் மக்கள் தமது அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுத்தமான குடிநீரைப் பேணுவதற்கு பெரும் கஷ்ரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன் சுத்தமான குடிநீரைப் பெறமுடியாத மக்கள் சுத்தமற்ற குடிநீரைப் பயன்படுத்துவதால் அப்பகுதி மக்களுக்கு தொற்று நோய்கள் பரவும் வேகமும் அதிகரித்திருக்கின்றது.

இவற்றைக் கருத்திற் கொண்டே யாழ்.அரச செயலகம் மேற்படி பிரதேசங்களுக்கு குழாய் மூலமாக குடிநீரினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. (33)

# பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை சங்கமம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் முதலாவது சங்கம நிகழ்வு கடந்த வெள்ளியன்று மாலை 3.45 மணியளவில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.விக்கினேஸ்வரராசா தலைமையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடரினை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அருட்சகோதரி டிலானி ஆசிரியை, திருமதி.விஜய வரதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு அரசியல் துறையைச் சேர்ந்த ரவியும், அன்னை பூபதி அம்மாவின் திருவுருவப்படத்திற்கு அச்சுவேலிப் பிரதேசப் பொறுப்பாளர் ஜெகனும், கரும்புலி கலைமதியின் திருவுருவப்படத்திற்கு அவரது சகோதரி நாகேஸ்வரியும் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர். அடுத்து அகவணக்கம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளரினால் தலைமை உரை வழங்கப்பட்டது.

தொடர்ந்து சிறப்புரையினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் மற்றும் பொருளாளர் சிவராசா ஆகியோரும் வழங்கினர். தொடர்ந்து மக்களுடைய முன்மொழிவுகள் இனம் காணப்பட்ட பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இன்றைய சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், மக்களுடைய பங்களிப்புத் தொடர்பாகவும், தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமாகக் கூறினார். தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் குகன் ஆசிரியரின் நன்றி உரையுடன் நிறைவு பெற்றது.

# இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களில் தேர்ச்சிபெற்றோருக்கு சான்றிதழ் வழங்கல்

(தென்மராட்சி)

தென்மராட்சி, தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தின் சார்பில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மூன்று இடங்களில் நடைபெற்றுவரும் இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களில் தேர்ச்சி பெற்று வெளியேறிய 15 மாணவர்களுக்கான பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடிகாமம் பிரதேசசபை புதிய விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தின் சார்பில் ஊனமுற்ற மாணவர் ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றும், கொடிகாமம் மத்திய பாலர் பாடசாலைக்கு 50 இருக்கைகளும் இந்நிறுவனத்தின் பொறுப்பாளர் செ.கமலநாதனால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கொடிகாமம் பிரதேசசபை செயலாளர் பாலச்சந்திரன் மற்றும் சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர், மருத்துவர், அருளானந்தம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ரத்தினம் மற்றும் பல்வேறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (28)

# வடமராட்சிக் கோட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கோட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமம் நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு நெல்லை முருகமூர்த்தி திருமண மண்டபத்தில் வடமராட்சிக் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி.அன்பு தலைமையில் ஆரம்பமானது. ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்திய சீலன், வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் தயா அவர்களும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக்கொடியினை யாழ்மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி. கலை விழி ஏற்றிவைத்தார். தொடர்ந்து 2ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படத்திற்கு இரண்டு மாவீரர்களுடைய சகோதரி திரு மதி.விஜயகுமாரி ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். கடற் கரும்புலி கப்டன் அங்கயற் கண்ணியின் திருவுருவப் படத்திற்கு கடற்கரும்புலி கப்டன் அன்பு மலரின் தாயார் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து அகவணக்கத்துடன் ஆரம்பமாகி வரவேற்புரையினை திருமதி வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை நிகழ்த்தினார். சிறப்புரையினை திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# நயினை அம்மன் ஆலய சூழலில் "வீரமுரசம்" கலையரங்க நிகழ்வு

யாழ்.நயினாதீவு பிரதேசத்திற்கான 'வீரமுரசம்' கலையரங்க நிகழ்வு நேற்று முன்தினம் இரவு நயினாதீவு அம்மன் ஆலயச் சூழலில் இடம்பெற்றுள்ளது.

நயினாதீவு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ஈழமாறன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வை தீவகக்கோட்ட அரசியல் துறை சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் பொதுச்சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

ஈகச்சுடரினை நயினாதீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ஜீவன் ஏற்றிவைத்தார். பொது மக்களிடையே சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இடம்பெற்ற இந்நிகழ்வில் தீவகக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ் நம்பி, புங்குடுதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் ஆகியோர் சிறப்புரைகளையும் வழங்கினர். (33)

# உரும்பிராய் சுன்னாகம் வீதியை புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

யாழ்.வலிகாமம் பிரதேசத்தில் உள்ள உரும்பிராய், சுன்னாகம் வீதியின் ஒருபகுதி கடந்த 10வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது. மேற்படி வீதியின் சுமார் 1கிலோமீற்றர் நீளமான பகுதி இவ்வாறு புனரமைப்புச் செய்யப் படாது காணப்படுவதால் அது பெரும் குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியூடாக பயணிப்போர் பல்வேறு சிரமங்களையும் எதிர் கொள்கின்றனர். வீதியின் சீரற்ற தன்மை குறித்து மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்ட போதும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## அடையாள உண்ணாவிரதம்

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தின் தீவகப் பிரதேசத்திற்கான விசேட நிகழ்வும் அடையாள உண்ணா விரத நிகழ்வும்,எதிர்வரும் 22 ஆம் திகதி வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை இடம்பெறவுள்ள அடையாள உண்ணாவிர தம் மற்றும் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை யாழ்பொது அமைப்புக்கள் இணைந்து மேற்கொண்டுள்ளன. (33)

# சந்திரிகாவின் குற்றச்சாட்டுக்கள் மீளப் பெறப்படுமா?

தற்போதைய ஆளும் கட்சியான ஐ.ம.சு கூட்டணி எதிர்க்கட்சியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்கவை தொன்யுவான் தர்மபால என பட்டம் சூட்டியது. தொன் யுவான் தர்மபால, போர்த்துக்கேயரிடம் நாட்டைக் காட்டிக்கொடுத்த, போர்த்துக் கேயரின் விருப்பத்திற்கு ஏற்றபடி வளைந்து கொடுத்த - தலையாட்டிப் பொம்மையாக இருந்த ஒருவராவார். பொ.ஐ. முன்னணி அப்போது அவரை அவ்வாறு கருதக் காரணம் அவர் விடுதலைப் புலிகளிடம் நாட்டைப் பிரித்துக்கொடுத்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்கின்றார் என கருதியமையாகும். இதனால் ரணில் விக்கிரமசிங்க என்ற தொன்யுவான் தர்மபாலவை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென மக்கள் முன் அப்போதைய எதிர்க்கட்சி முழக்கம் இட்டது. இதற்கு சந்திரிகா பல காரணங்களை மக்களிடம் முன்வைத்தார்.

அவர் முதலாவதாக அடியெடுத்து வைத்தது ரணில் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை சட்ட விரோதமானது எனக் கூறியதன் மூலமே.

அடுத்ததாக அப்போதைய ஆளும் கட்சியும், விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுக்கள் என்று உலகைச் சுற்றித்திரிந்து களியாட்டம் நடத்துவதாக அறிக்கை விட்டது. அத்துடன் முடியுமானால் விடுதலைப் புலிகளை தனிநாடு என்றில்லாத வேறு ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கோருமாறு சந்திரிகா சவால் விடுத்தார்.

2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபோது அதை வெறும் வாய்ப்பேச்சு என்றும் தனியான அரசு உருவாகி விட்டதாகவும் தெரிவித்தார். அது தொடர்பாக பத்திரிகைக்கு செய்தியளித்த சந்திரிகா கூறியதாவது;

ரணிலின் சமாதான நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகப் பலம்பெற வைக்கிறது என்று தெரிவித திருந்ததுடன் சமஷ்டி ஆட்சிக்கு இணங்குவது பேராபத்து என்று தெரிவித்தார். சமஷ்டி முறைக்கு முன்பு விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என லக்ஸ்மன் கதிர்காமரும் தனது பங்கிற்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறு புலிகள் கோரிய போது, அப்போதைய யாழ். கட்டளைத் தளபதியாக இருந்த சரத் பொன் சேகாவை அழைத்து அதற்கிணங்க வேண்டாமெனவும் இதில் உறுதியாக இருக்குமாறும் ஆலோசனை வழங்கினார். 2003ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு வானொலி தொடர்பு சாதனங்களை பெற்றுக்கொடுத்தமை தொடர்பாக நோர்வே தலையிட்டதற்கு நோர்வே தூதுவரை அகற்றுமாறு நோர்வே அரசுக்கு சந்திரிகா கடிதமொன்றை அனுப்பினார். அத்துடன் வானொலி தொடர்பு சாதனங்களை வழங்கியமை இந்தியாவைப் பாதிக்குமென்று இந்தியாவிடம் கூறி, இந்தியாவுடன் நோர்வே கொண்டிருந்த நட்புறவிற்கு பங்கம் விளைவித்தார் சந்திரிகா. 2003ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சந்திரிகா விடுதலைப் புலிகளை ரணிலின் அரசு பலம்பெற வைக்கிறது எனக் கூறியதுடன் சில புகைப்படங்களையும் ஆதாரமாக்கினார். இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாடு யப்பானில் நடைபெற்றபோது மாநாட்டுக்கு ஆதரவளித்த யப்பானியத்தூதர் யசுசி அகாஸி சிறிலங்காவின் சர்வதேச ஆலோசகராக செயற்படுவதாக தெரிவித்ததால் யப்பான் நாட்டையும் அகாஸியையும் அசௌகரியத்திற்குள்ளாக்கினார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப்புலிகளுக்கு சார்பாக செயற்படுவதாக குற்றம்சாட்டி இந்தியத் தூதுவர் மூலம் இந்தியாவின் மத்தியஸ்தம் வேண்டுமென ஜே.வி.பி.யுடன் இணைந்து கோரிக்கை விடுத்தார். இதுவும் இந்திய, நோர்வே அரசுகளுக்கிடையில் மனக்கசப்பை ஏற்படுத்தியது.

2003 மே மாதம் கொழும்பில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டு விவாதத்தில் ஈடுபட்டு உரையாற்றிய கதிர்காமர் சிறிலங்கா வெளிநாட்டவர்களின் களியாட்ட மத்தியஸ்தமாக மாறிவிட்டது எனத் தெரிவித்தார்.

2003 ஆகஸ்டில் யப்பானில் மீண்டும் நிதியுதவி வழங்கும் மாநாடு தொடர்பாக யப்பான் சந்திரிகாவிடம் கருத்துக் கேட்ட போது, தமக்கு ஒன்றும் தெரியாதென அறிவித்து நழுவிவிட்டார்.

மணிராசன் குளத்தில் புலிகள் முகாம் அமைப்பதாகக் கூறி சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டார். அத்துடன் கதிர்காமரை இந்தியாவுக்கு தூதனுப்பி இந்தியாவின் எண்[illegible]குதங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதாக தெரிவித்தார். யுத்தநிறுத் தக்குழுத் தலைவரின் அறிவுரைகளுக்கு செவிசாய்க்க வேண்டாமென முப்படைகளுக்கும் உத்தரவிட்டார். அத்துடன் கண்காணிப்புக்குழுவின் நோர்வே பிரதிநிதியை திருப்பி அழைக்குமாறு நோர்வேயிடம் கேட்டதன் மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தலை உண்டு பண்ணினார். சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நடைபெற்ற ஊர்வலத்திற்கு செய் தியனுப்பிய சந்திரிகா நாட்டுக்கும் மக்களுக்கும் இன்று பாதுகாப்புக் கிடையாது என்று தெரிவித்தார். அதனைப பாதுகாக்கும் பொறுப்பை தன்வசமாக்கும் அவசியம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்த சந்திரிகா ஒப்பந்தத்தை குப்பையில் போடுமாறு கோஷமிட்டார்.

எனினும் மீண்டும் பேச்சுக்களை ரணிலும், விடுதலைப்புலிகளும் ஆரம்பித்தவேளை அமைச்சுப்பதவிகளை சுவீகரித்து இடையூறு விளைவித்தார். இதற்கு நியாயம் கூறும் விதமாக விடுதலைப் புலிகளை ரணில் அரசு சமாதானம் என்ற போர்வையில் பலப்படுத்துவதாலும், திருகோணமலையில் புலிகள் 17 முகாம்களை அமைத்திருக்கின்றார்கள் என்றும் கூறியதுடன், ரணிலின் அரசு இதனைக்கணக்கில் எடுக்கவில்லை என்றும் 'தபினான்ஸியல் ரைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு பேட்டியளித்தார். இந்த முகாம்களை அகற்றும் பொறுப்பை பிரதமர் என்ற வகையில் ரணிலும், பாதுகாப்பு அமைச்சும் ஏற்காமல் கண் காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்து கைகழுவி விட்டது எனவும் அவர் குற்றம்சாட்டினார்.



அதன் மூலம் 3 அமைச்சுப்பதவிகளையும் தன்வசப்படுத்தி இதனைத்தடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது அவர் ரணிலின் சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட 2002ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை எடுத்த நடவடிக்கைகளாகும்.

ஆயினும் அன்று தொட்டு இன்று வரை அவர் முன்னெடுத்துச் செல்வது ரணிலின் சமாதானத்திட்டத்தையே. சந்திரிகா அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்க முன்பு செய்து சொன்னதற்கு அமைவாக செய்ய வேண்டியது சமாதான உடன்படிக்கையை தான் கைச்சாத்திட்டிருக்க வேண்டியதே. எனினும் ரணில் கையெழுத்திட்ட ஒப்பந்தமே இப்போதும் நடைமுறையில் உள்ளது.

ஆயினும் முன்னர் தெரிவித்த அத்தனை எதிர்ப்புக்களிலிருந்தும் அவர் இறங்கி வந்துள்ளார். விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதைக் கூட ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமைச்சுப் பொறுப்புக்களை கையேற்றவுடன் சரத் பொன்சேகாவை இடம் மாற்றி சிற்சில பாதுகாப்பு வலயங்களையும் அகற்றி விட்டார். வானொலித் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி தனது வானொலிச் சேவையையும் புலிகள் விஸ்தரித்துக் கொண்டுள்ளனர்.

அவரது அரசுபதவியேற்றதும் தூதுவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி நிதியுதவிகளையும் கோரிவருகின்றார். ரணிலின் அரசாங்கத்தின் போது இந்தியாவை மத்தியஸ்தத்திற்கு அழைத்த சந்திரிகா இன்று அதுபற்றி ஒரு வார்த்தையும் கூறாதுள்ளார். முன்னர் புலிகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுவதாக கூக்குரல் இட்ட சந்திரிகா இப்போது வாய்மூடி மௌனியாக இருக்கின்றார். இப்போது விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும் பேச்சு நடத்த சம்மதம் தெரிவித்துள்ளார். ஆயினும் 2002 நவம்பரில் தான் பதவியேற்ற 8ஆவது வருடக் கொண்டாட்டத்தின் போது கூறியதாவது; விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அரசியல் நீர் ஓட்டத்திற்கு வந்தால் இடைக்கால சபை பற்றிச் சிந்திக்கலாம் என்று தெரிவித்தார்.



முன்னைய ஐ.தே.க அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டம்

அவ்வாறு தெரிவித்த அவர், இன்று இடைக்கால சபைபற்றி முதலில் பேச்சுக்கள் நடத்தி சபையை உருவாக்க ரணிலின் சமாதானத் திட்டத்தையே முன்னெடுத்துச் செல்ல முன் கூறிய தொன்யுவான் தர்மபாலவின் ஆதரவையே கோருகின்றார்.

அப்படியாயின் நவீன தொன்யுவான் தர்மபால எனப்படும் ரணில் செய்ய வேண்டியது என்ன?

ரணில் உண்மையான அரசியல் வாதியாயின் சந்திரிகா அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்க முன்பு அவரின் சமாதான நடவடிக்கை தொடர்பாக சந்திரிகா பொதுமக்களிடம் தெரிவித்த விடயங்களை மீளப்பெறவேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கவேண்டும். அதற்கு சந்திரிகா இணங்காதுவிட்டால் ஜே.ஆர் உறுதியாகப் பற்றியிருந்த டிஸ்ரேலி தொடர்பாக ரொபட்பிளக் என்பவரின் சிபார்சுக்கு ஏற்ப நடப்பதே அன்றி நிகழ்வுகளை மாற்றியமைக்க முடியாத போது தப்பி ஓடும் அரசியல்வாதி என்ற நிலைக்குத் தள்ளப்படவேண்டியேற்படும்.

உப்புள் ஜோசப் பர்ணாந்து (லங்கா தீப)

தமிழில் வடிவேல்

---

## நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் உள்ள தற்காலிக காணி உரிமையாளர்களுக்கு நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் கரைச்சிப் பிர[illegible]ச காணி உத்தியோகத்தர் செ.[illegible]ரெங்கநாதன் தலைமையில் வட்டக்கச்சி, புதுமுறிப்பு, சேவிஸ் வீதி, கனகாம்பிகை, தொண்டமான் நகர், அக்கராயன், மாயவனூர், புதுக்காடு, கிருஷ்ணபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களில் நடமாடும் காணி செயலகம் மூலம் காணிப்பிரச்சினைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றது.

இந்நடவடிக்கையின் பிரகாரம மேற்படி கிராமங்களில் 273 புதிய காணிப்பதிவுகளும், 105 காணி மாற்றங்களும், 209 காணிகளுக்கு (எல்.டி.ஓ போமிற்) நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றதுடன் 35 காணி உரிமையாளர்களுக்கு காணி உறுதி வழங்கப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

---

## காலம் கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள் மேற்கொள்ள ஏற்பாடு

கிளிநொச்சி அரசசெயலக மேலதிக மாவட்ட பதிவகத்தினால் இடம்பெயர் சேவை மூலம் காலம் கடந்த இறப்பு,பிறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் கிராம மக்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதியன்று தருமபுரம் மகாவித்தியாலயத்திலும், பரந்தன் குமரபுரம் மக்களுக்கான பதிவுகள் 26 ஆம் திகதியன்று பரந்தன் குமரபுரம் மகாவித்தியாலயத்தில் வைத்தும் காலம்கடந்த இறப்பு,பிறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதென கிளிநொச்சி மேலதிகமாவட்ட பதிவாளர் திரு மதி.என்.செல்வராஜா தெரிவித்துள்ளார். (சோ)

## 09

★சீனாவின் ஷாங்ளி மாகாணத்தில் “தைய்வான்” என்ற செயற்கைக்கோள் 4-பீ என்ற ஏவுகணைமூலம் 2 அறிவியல் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது.

★இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் அவுஸ்திரேலிய தூதரகம் அருகே கார்க்குண்டு வெடித்ததில் 9பேர் பலியானதுடன் 100 பேர் காயமடைந்தனர்.


குண்டுவெடிப்பின் கோரம்

★சூடானின் டார்பர் பகுதியில் இடம் பெற்றுவரும் வன்முறைகள் இனப்படு கொலைகள் என புஷ் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

★சீனாவின் எல்லையருகே வடகொரியாவின் நியாங்காங் பிராந்தியத்தில் பாரிய குண்டு வெடித்தது.

★நாஸாவினால் விண்ணுக்குஅனுப்பப்பட்ட “ஜெனஸிஸ்” விண்கலம் 27 மாதங்களாக சூரியனிலிருந்து துகள்களை எடுத்து அதனை கூண்டொன்றின் மூலம் பூமிக்கு அனுப்பிய போது அக்கூண்டு “ஹைதா” பாலை வனப்பகுதியில் விழுந்து புதையுண்டது.

## 10

★ஐ.சி.சி மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் ஆரம்பமாகியது.

★ஜமேக்காவை “லிவான்” என்னும் சூறாவளி தாக்கியதில் 29பேர் பலியாகியதுடன் சொத்துக்கள் பலவும் நாசமாகின.


சூறாவளியின் பாதிப்பு

★இந்தியப்பிரதமர் அலுவலகத்திற்கான மத்திய இணை அமைச்சர் பிரிதிவிராஜ் சவான் சென்னை வந்து தி.மு.க.தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்தார்.


கலைஞருடன் சந்திப்பு

## 11

★அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் 3ஆவது ஆண்டு நிறைவு நாள் நியூ யோர்க் உட்பட பல நாடுகளிலும் அனுஷ் டிக்கப்பட்டது.


தாக்குதல் நினைவாக

★1907ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத் தியாகி மேடம் காமா தயாரித்த மூவர்ணக் கொடியுடன் மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சர் உமாபாரதி ஹப்ளியில் இருந்து ஜாலியன் வரை யாத்திரை ஆரம்பம்.


பாதயாத்திரை ஆரம்பத்தில்

★சவுதியின் ஜெட்டாநகரில் அமெரிக்க வங்கி முன்பு கார்க்குண்டு வெடித்ததில் ஒருவர் பலி; 4பேர் காயம்.

★ஏதேன்ஸிலிருந்து வடக்கை நோக்கிப் புறப்பட்ட உலங்குவானூர்தி கட்டுப்பாட்டை இழந்து எயிஜியன் கடலுக்கருகில் சிதறுண்டு விழுந்ததில் அதில் பயணம் செய்த கிரேக்க ஆன்மீகத் தலைவர் உட்பட 16பேர் பலி.

★எச்.ஐ.வி.உயிர் கொல்லி நோயைக் கட்டுப்படுத்தும் ஏ.இ.வி.எம்.இ.வி. என்ற 2 வகையான தடுப்பூசிகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுகண்டுபிடித்ததாக அறிவிப்பு.

## 12

★ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் தொடர் கார்க் குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கித்தாக்குதலினால் 22 பேர் கொல்லப்பட்டதுடன் 42பேர் காயமடைந்தனர்.


பாக்தாத்தில் தாக்குதல்

★வொஷிங்டனிலுள்ள ரஷ்ய தூதரகத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்ட புஷ் ரஷ்ய பாடசாலையில் கொல்லப்பட்டவர்களின் நினைவான அனுதாப ஏட்டில் கையொப்பமிட்டார்.

★ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பல இடங்களிலும் 7 கார்க்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதன் காரணமாக 120 பேர் உயிரிழந்தனர்.

★ரஷ்யாவினுடைய எம்-ஐ-24ரக உலங்கு வானூர்தி விழுந்ததில் 2 ரஷ்யவீரர்கள் கொல்லப்பட்டனர். ஹெலி விழுந்தமைக்கான காரணம் இதுவரையும் தெரியவில்லை.

★பங்களாதேஷின் யமுனா நதியில் படகு மூழ்கியதில் படகில் பயணித்த 100 பேரில் 20பேர் காணாமற் போயினர்.

★காஸாவிலிருந்து குடியேற்றவாசிகளையும், இஸ்ரேலியப் படைகளையும் வெளியேற்றும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜெருசலேமில் பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்.

★தமிழீழ தேசிய மாவீரர்கள் நினைவாக தமிழீழ விடுதலைப்புலிகளின் இத்தாலி பணியகத்தால் நடத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுக்கிண்ணத்தின் வெற்றிக் கிண்ணப் போட்டி இத்தாலியிலுள்ள பலெர்மோ நகரில் இடம்பெற்றது.

## 13

★ஈரானின் அணுத்திட்டம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தயாரித்துள்ள நகல் வரைவை ஆராய சர்வதேச அணு சக்தி அமைப்பின் கூட்டம் ஆரம்பமாகியது.

## 14

★பாக்தாத்தின் மத்தியபகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீது இடம் பெற்ற கார்க் குண்டுத்தாக்குதலில் 47 பேர் பலியாகினர்.


இழப்பின் சோகத்தில்

★ஈராக்கின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 3.4 பில்லியன் அமெரிக்க நிதியினை கொண்டு அந்நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த பயன்படுத்தப்போவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் “மார்க் குரெஸ்மன்” தெரிவித்துள்ளார்.

★இந்திய பாதுகாப்பு வளர்ச்சி ஆராய்ச்சித்துறை தயாரித்த கடற்படைக்குரிய “திரிசூல்” என்ற ஏவுகணை சோதனையிடும் போது திடீர் கோளாறு ஏற்பட்டமையினால் சோதனை கைவிடப்பட்டது.

### கடந்த வாரத்தில்

09.09.2004-15.09.2004

★பங்களாதேஷில் தொடர்ந்து பெய்த மழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 20 பேர் பலியாகியதுடன் 20 பேர் காணாமற் போயினர்.


வெள்ளத்தில் அவலம்

## 15

★தீவிரவாதிகளின் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள பெஸ்லான் நகரிலுள்ள பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது.

★அபு கிறாய் சிறைச்சாலையிலிருந்து 100இற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.


விடுதலையின் மகிழ்வில்

★தீவிரவாதிகளின் நடவடிக்கையில ஈடுபட்டவர்கள் என சந்தேகிக்கப்பட்ட 10 பேரை ஸ்பெயின் பொலிசார் கேட்ட லோனியா என்ற இடத்தில் வைத்துக் கைது செய்தனர்.

★இந்திய சனாதிபதி அப்துல் கலாம் தென்னா பிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டார்.


மண்டேலாவுடன் கலாம்

# திருமலையில் ‘இடி’ வீதிநாடகம்

(அலுவலக செய்தியாளர்)

தற்போதைய சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வகையில் தயாரிக்கப்பெற்ற ஆசிரியர் போ.சே. ரகுவின் “இடி” வீதிநாடகம் திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கிராமம் கிராமமாக காண்பிக்கப்பெற்று வருகின்றது.

மேற்படி வீதிநாடகத்தினை பெருந்திரளாக மக்கள் பார்வையிட்டு வருவதுடன் நாடகத்தின் கருப்பொருளினை உள்வாங்கிச்செல்வதாகவும் “இடி” வீதி நாடகத்தினை மீண்டும் மீண்டும் பார்வையிட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது. மக்களின் வேண்டுகையின் பிரகாரம் கடந்த ஒரு மாதகாலமாக திருகோணமலை மாவட்டத்திலேயே மேற்படி நாடகம் காண்பிக்கப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### மறைக்கல்வி வகுப்பு

பூநகரிப் பிரதேசத்திலுள்ள பூநகரி வலைப்பாடு, நொச்சிமுனை, முழங்காவில் ஆகிய 4பங்குகளில் இருக்கும் 53 மறைக்கல்வி ஆசிரியர்களிற்கான 3 நாள் மறைக்கல்வி செயலமர்வு 17 ஆம் திகதி முதல் குமுழமுனை அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. (34)

### புனரமைப்பு

வட்டக்கச்சி கட்சன் வீதியில் இருந்து மாயவனூர் இந்து மயானம் வரையிலான வீதி நீண்ட காலமாக எந்தவிதத் திருத்த வேலைகளும் செய்யப்படாமல் பெருமரங்களும் பற்றைக்காடுகளும் காணப்பட்டது. இதனை உலர் உணவூடனான திட்டத்தின் கீழ் மக்கள் சிரமதானப்பணி மூலம் புனரமைத்துவருகின்றனர். இப்பணியானது இன்னும் சில நாட்களில் முடிவடைந்து, இப் பாதை போக்குவரத்துக்கு விடப்படுமென பணியாளர்கள் குறிப்பிடுகின்றனர். (12)

# இடையிடையே பெய்யும் மழையால் சிறுபோக அறுவடை பாதிப்பு

அவ்வப்போது பரவலாக பெய்துவரும் மழைகாரணமாக சிறுபோக நெல்அறுவடை பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

ஏற்கனவே வரட்சியால் ஒரு பகுதி நெற்செய்கை அழிவடைந்தும் மற்றும் போதிய விளைச்சல் இன்றியும் காணப்படும் அதே வேளை தற்போது அறுவடை நேரத்தில் பெய்யும் மழையால் நெற்செய்கையாளர் பெரும் பாதிப்புக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இடையிடையே பெய்து வரும் மழையினால் பயிர்நிலங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றன. வட்டக்கச்சிப்பகுதியில் கடும் வரட்சியால் நீரின்றி பெருமளவு பயிர்நிலங்கள் எரிந்து நாசமாகியது. இதனால் பெருமளவு விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியிருந்தனர். தற்போது பெய்துவரும் மழையினால் அறுவடைக்குத் தயாராக உள்ள நிலங்களும், அறுவடை செய்தநிலங்களும் மழையினுள் நனைந்து வருகின்றன. இதனால் அறுவடைக்கால செலவு அதிகரித்து காணப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளபட்ட சிறுபோக நெற்செய்கை பாதிப்பு அடைந்துள்ளதாக அங்குள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் பெய்து வரும் தொடர் மழைகாரணமாக நெற்செய்கை பாரியளவில் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(12,08)

# இளைப்பாற்று மண்டபம் பூர்த்தி

நிகொட் நிறுவனத்தால் பள்ளிக்குடாவில் கடற்றொழிலாளர்களிற்காக அமைக்கப்பட்ட இளைப்பாற்று மண்டபம் ஒரு மாதத்திற்கு முன்னர் பூர்த்தியாகியுள்ளது எனவும், வெகுவிரைவில் திறப்பு விழா நடைபெறும் எனவும் கடற்றொழில் சங்கத் தலைவர் யோ.பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். இதனால் 250 தொழிலாளர்கள் நன்மையடைவரென்பது குறிப்பிடத்தக்கது. (34)

# வாக்களிக்க அ.அட்டை கட்டாயமாக்கினால் அவற்றை விரைவில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

**தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டால் அவற்றை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சிறிலங்காவின் ஆட்பதிவுத்திணைக்களத் தலைவர் அபேரட்ண தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பாக தேசிய அடையாள அட்டைகளை துரிதமாக வழங்குவதற்கென விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏறத்தாழ 25 இலட்சம் வாக்காளர்கள தேசிய அடையாள அட்டைகளைக் கொண்டிருக்கவில்லை. என்பது தெரியவந்துள்ளது. மோசடியான வகையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுவதைத் தடுக்கும் வகையில் தற்சமயம் நடைமுறையில் உள்ள ஒரு நாள் சேவையினை மூன்று நாள் சேவையாக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இந்த வருடத்தில் சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளைத் துரிதமாக வழங்கவென விசேட திட்டம் ஒன்று ஏற்கனவே நடைமுறைக்கு இடப்பட்டுளளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அனைவரும் கௌரவமாக வாழக்கூடிய சமாதானத்தை நிலைநாட்டுவது அவசியம்

*– அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் கூறுகிறார்*

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் அனைவரும் கௌரவமாக வாழக்கூடிய சமாதானத்தை நிலைநாட்டுவது அவசியம் என சிறிலங்கா மாகாணசபை அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்விலக்கை அடைவதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டுமென அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரும் இணங்கக்கூடிய சமாதான யோசனைகளை சனாதிபதி முன்மொழிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் சமாதானம், அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய தெளிவான செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் விடயத்தில் மாகாண சபைகளும் உள்ளூராட்சி அமைப்புக்களும் முன்னணி வகிக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கீனமாக நடந்து கொண்ட 3 பொலிசாருக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

ஒழுங்கீனமாக நடந்துகொண்ட சப்இன்ஸ்பெக்டர் ஒருவரையும், இரண்டு கான்ஸ்டபிள்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த எட்டாம் திகதி கொள்ளுப்பிட்டியில் உள்ள இரவு விடுதியொன்றிற்குச் சென்று அங்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தாக்கியதுடன், துப்பாக்கி முனையில் வெளிநாட்டவர் ஒருவரிடமிருந்து 2,50,000 ரூபாய்களை கொள்ளையடித்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான சப்இன்பெக்டர் சுஜீவ பிரேமரத்ன மற்றும் கான்ஸ்டபிள்களான கெலும் மஞ்சுள, ரஞ்சித் பண்டார ஆகிய மூவரையுமே விளக்க மறியலில வைக்குமாறு கொழும்பு கோட்டே நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# சிறிலங்காவில் பாணின் விலை மூன்று ரூபாயால் அதிகரிப்பு!

(கொழும்பு)

திடீரென பாணின் விலையை நேற்று மேலும் 3 ரூபாயால் அதிகரித்துள்ள கண்டி பாண் விற்பனையாளர்கள் மாவின் விலை உயர்ந்துள்ளதே இதற்கான காரணம் என்று தெரிவித்துள்ளனர். நாடளாவிய ரீதியில் பாணின் விலை குறைந்தது 3 ரூபாயால் உயரலாம் என்று தெரிவிக்கும் அவதானிகள், பொருளாதார வளர்ச்சியை விரைவாக உருவாக்க உள்ளதாக மக்களை ஏமாற்றிய சந்திரிகாவின் கூட்டணியினர் மிகவிரைவாக தங்களது உண்மை முகத்தைக் காட்டிவிட்டதாக வெறுப்புடன் தெரிவித்துள்ளனர்.

பாணின் விலை 3ரூபாயால் அதிகரித்திருக்கின்றதென்றால் ஐ.ம.சு மு. கூட்டமைப்பின் ஏனைய உறுதிமொழிகளும் வெறும் அரசியல் பிரச்சாரங்களே என்பதில் எந்த வித ஐயமும் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# 800 ரூபாய் சம்பள உயர்வையே அரசாங்கம் வழங்க உத்தேசம்

*–இரகசியமாகக் கசிந்த தகவல்*

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் அரசாங்கம் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 800 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதற்கு அரசு தீர்மானம் எடுத்துள்ளதாக இரகசியத் தகவல் தமது சங்கத்திற்கு கிடைத்துள்ளதாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் ஜீ.கே.பியதாச தெரிவித்துள்ளார்.

5000 ரூபாய் சம்பளம் அதிகரிக்க வேண்டுமென ஏற்கனவே தொழிற் சங்கங்கள் நிதியமைச்சருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாணவர் சீருடைத் துணிகளை ஒப்படைக்க நிர்ப்பந்தம்

(கொழும்பு)

சிறிலங்காவின் வருமானவரி இலாகாவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை இறக்குமதி செய்த உரிமையாளர்களிடம் கையளிக்காவிட்டால் சீருடைகளை இறக்குமதி செய்ய மாட்டோம் என 9 வியாபார ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள் நிதி அமைச்சு, கைத்தொழில் அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

அத்துடன் சனாதிபதிக்கும் இது சம்பந்தமாக அறிவித்துள்ளார்கள். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் இம்முறை பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்குவதில் பெரும் சிக்கல் ஏற்படுமென வர்த்தக ஸ்தாபனங்கள் அறிவித்துள்ளன.

# துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றவர் வைத்தியசாலையில் மரணம்

(கொழும்பு)

கொழும்பு அலெக்ஸாண்டர் மாவத்தையில் அண்மையில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஜிப்போ என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டபோது படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மற்றைய நபரும் உயிரிழந்துள்ளார்.

சில்வெஸ்ரர் மத்தியூ (வயது 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்நபர் பொரளை-மகஸின் வீதியைச் சேந்தவர் ஆவார்.

குறித்த இக்கொலைகள் தொடர்பாக கொழும்பு குற்றப்பிரிவு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஏற்கனவே இருபத்தைந்திற்கும் மேற்பட்டோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கறுவாத்தோட்ட பொலிசார் தெரிவித்துள்ளதாக 'டெய்லிமிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

# பொருட்களின் விலைகளை அனுமதியுடன் அதிகரிக்க பணிப்பு

(கொழும்பு)

பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டுமானால் மக்கள் கொள்வனவு பகுதிக்கு அறிவித்து அவர்களின் அனுமதி பெற்ற பின்பே பொருள்களின் விலைகளை அதிகரிக்க முடியும் என சிறிலங்கா அமைச்சரவை தீர்மானம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கு மாறாக பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் வர்த்தகர்கள் உடன் கைது செய்யப்படுவார்கள் என வணிக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

# நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களுக்கு 'ஒபெக்' அமைப்பு உதவ இணக்கம்

(கொழும்பு)

நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வழங்க 'ஒபெக்' அமைப்பு இணங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற இத்திட்டங்களிற்கான அரைவாசி செலவினை ஏற்றுக்கொள்ள முடியுமென ஒபெக் அமைப்பு தெரிவித்துள்ளதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்

தென்மாகாண அபிவிருத்தித் திட்டம் வடகிழக்கு அபிவிருத்தித் திட்டம், வீதி அமைப்புத்திட்டம் என்பன உட்பட அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியை பெறுக்கொள்வது தொடர்பாக அறிக்கைகள் ஒபெக் நாடுகளின் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# தலைமறைவான போலி கைப்பந்தாட்டக் குழு ஜேர்மனிய பொலிசாரால் கைது

இலங்கையிலிருந்து ஜேர்மன் சென்ற போலி கைப்பந்தாட்டக் குழுவைச் சேர்ந்த 23 பேர் கடந்த வெள்ளியன்று மாலை ஜேர்மன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஜேர்மனியில் நடைபெற்ற கைப்பந்தாட்ட போட்டியொன்றில் கலந்து கொள்ள விண்ணப்பித்து அதற்கான விசாவைப் பெற்று இந்த அணியினர் சென்ற[illegible]ந்த போதிலும் போட்டியில் க[illegible]ந்து கொள்ளாமல் தலைமறை[illegible]கியிருந்தார்கள். இவர்கள் திட்டமிட்டு இத்தாலிக்கு செல்லும் நோக்கத்துடனேயே இந்தப் பயணத்தை மேற்கொண்டதாகப் பின்னர் தெரியவந்துள்ளது.

ஒரு வாரகாலமாக ஜேர்மனியில் தலைமறைவாகியிருந்த இவர்கள் வெள்ளியன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கிடையில் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக 33 பேர் இலண்டனுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஏயர் லங்கா அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட சட்டவிரோத பயணிகளுடன் இவரும் தற்போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


## குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் விற்பனை வவுனிக்குளம்

**வவுனிக்குளத்தின் குளக்கட்டிற்கு அருகாமையில் உள்ள குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின் போது குடியிருந்தவர்கள் வெளியேறிச் செல்லும் போது அக்காணிகளை இங்குள்ளவர்களுக்கு விலைக்கு விற்றுச் செல்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.**

**இக்காணிகளுக்கு எக்காரணம் கொண்டும் காணி அனுமதிப்பத்திரம் வழங்க நீர்ப்பாசனத் திணைக்களம் சிபார்சு செய்ய மாட்டாதது மட்டுமல்ல, இவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்கட்கு சிபார்சு செய்யும்.**

**எனவே இவ்வாறான காணிகளை விலைக்கு வாங்க வேண்டாமென அறிவுறுத்துகின்றோம்.**

**எந்திரி. வ.தவக்குமார்,**
**நீர்ப்பாசனப் பொறியியலாளர்,**
**வவுனிக்குளம்.**

*(சி-10212)*

# கடுமையான பிரச்சினைக்கு உடனடித்தீர்வு


# மன்மோகன்சிங் வை.கோவிடம் உறுதிமொழி

**சென்னை உள்ளிட்ட தமிழகத்தில் கடுமையான பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காணும் திட்டங்களை அமுற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய திட்டக்குழுவிடம் தாம் தெரிவிப்பதாகப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார் என்று ம.தி.மு.க.செயலர் வை.கோ கூறியுள்ளார்.**

தமது நடைப்பயணத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி சென்று இதுகுறித்து,தமிழக மக்களின் கோரிக்கையாக எடுத்தியம்பியபோது, பிரதமர் உறுதியளித்ததாக அவர் கூறியுள்ளார்.

புதுடில்லியிலிருந்து நேற்றுச் சென்னை திரும்பிய வை.கோ விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

தமிழக விவசாயத்திற்குப் பாசன நீர்ப் பற்றாக்குறை நிலைக்குத் தென்னக நதிநீர் இணைப்புத் திட்டத்தின் ஆய்வுப்பணியை விரைவுபடுத்தவுள்ளதாகப் பிரதமர் தம்மிடம் கூறியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோருடன் மார்க்சிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஹர்கிசன்சிங் சுர்ஜித்,ஜோதிபாசு,சீத்தாராம்யெச்சூரி ஆகியோர் ஆலோசனை நடத்தியபோது எடுத்தபடம்

-மத உணர்வுகளைத் தூண்டும் பா.ஜ.க.வின்

# நடவடிக்கைகளுக்கு காங்கிரசே தகுந்த பதிலடி கொடுக்கவேண்டும்;

மதசார்பற்ற சனநாயக நெறி முறைகளைத் தாக்கிப் பேசிவரும் பாரதிய ஜனதாக்கட்சியினருக்குப் பதிலடி கொடுக்க வேண்டிய முக்கிய பொறுப்பு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு உள்ளதாக மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு தெரிவித்துள்ளது. அரசியலில் எந்தவிதத்திலாவது மத உணர்வுகளைப் புகுத்துவதற்கான பாரதிய ஜனதாவின் முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அனைத்து மத சார்பற்ற சனநாயக சக்திகளும் எடுக்க வேண்டும் என்று புதுடில்லியில் நேற்று நிறைவடைந்த மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உமாபாரதியின் மதசார்பு யாத்திரை போன்றன பாரதிய ஜனதாக் கட்சியின் மதத்தை அரசியலில் புகுத்தும் முயற்சியே என்றும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் பாரதியஜனதா சிவசேனக் கூட்டணியைத் தோற்கடிக்கும் வகையில் மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சித் தேர்தலில்போட்டியிடும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# பாகிஸ்தானியர்களுக்கான விசா கட்டுப்பாட்டை இந்திய மத்திய அரசு தளர்த்தியது

பாகிஸ்தானைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் ஆகியோருக்கு விசாக் கட்டுப்பாடுகளை இந்தியா தளர்த்தியுள்ளது.

புது டில்லியில் இந்தத் தகவலை வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் நௌதீன் சர்மா கூறியுள்ளார்.

இந்தியாவிற்குள் அவர்கள் 12 இடங்களைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் 65 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பாகிஸ்தானியர்களுக்கும் விசாக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுவதாக கூறிய சர்மா, இரு நாட்டு மக்களுக்கும் இடையே தொடர்புகளை மேம்படுத்த இது உதவும் என்றும் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் இதே போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அமெரிக்காவில் பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் சனாதிபதியைச் சந்திக்கவுள்ள நிலையில் இந்தியாவின் இந்த நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுவதாகக் கூறப்படுகிறது.

# அமெரிக்க- இந்தியத்தலைவர்கள் இன்று பேச்சு இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவர்

(நியூயோர்க்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சும். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இன்று நியூயோர்க்கில் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்திய-அமெரிக்க இரு தரப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்துவார்கள் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசவுள்ளார். ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி இந்தியாவுக்கு அளிக்கவேண்டுமென்று மன்மோகன்சிங் அவர்களிடம் வலியுறுத்தவுமுள்ளார்.

## மத்திய திட்டக் குழுவில் வெளிநாட்டு நிபுணர்கள்

மத்திய திட்டக் குழுவிலவெளிநாட்டு நிபுணர்களைச் சேர்க்கும் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன்சிங்குடன் பேசவுள்ளதாக திட்டக்குழுவின் துணைத் தலைவர் மொண்டஸ்சிங் அலுவா லியா நேற்று முன்தினம் புதுடில்லியில் கூறியுள்ளார்.

பிரதமருடன் தாம் வெளி நாட்டுப்பயணத்தின் போது இது குறித்துப் பேசவுள்ளதாகவும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## 210, 000 பொறியியல் மாணவர் இந்தியாவில் வேலையின்றியுள்ளனர்

இந்தியாவில் பொறியியல் படித்த சுமார் 2இலட்சத்து 10ஆயிரம் பேர் வேலை வாய்ப்பின்றி இருப்பதாக மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை கூடுதல் செயல் முறைப் பயிற்சி ஆலோசகர் எஸ்.சுதர்சனம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் பொறியியற் கல்லூரியின் முதல்வர்கள் கூட்டத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

# தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்காது

## லல்லுபிரசாத் யாதேவ்

(புதுடில்லி)

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்காது என்று புகையிரத அமைச்சர் லல்லுபிரசாத் யாதேவ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வேலூர் அருகேயுள்ள புகையிரத நிலையத்தில் கணினிமயமாக்கப்பட்ட பொதுப் பயணச்சிட்டை வழங்கும் வசதியுடன் கூடிய அலுவலகத்தை திறந்து வைத்து, நடைபாதைக்கான மேற்கூரைக்கு அடிக்கல் நாட்டிய பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடன்களுக்காக உலகவங்கியையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் நாம் சார்ந்துள்ள போதிலும் அவர்கள் நமக்கு கடன்களைத்தான் தருகின்றார்களே தவிர தொழில் நுட்பத்தைத் தருவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# சொத்துக்குவிப்பு வழக்குக் காரணமாக ஜெயலலிதா வெளிநாடு செல்லத்தடை

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வெளிநாட்டுப் பயணத்தைத் தடுத்துள்ளது.

முதுகுவலிக்குச் சிகிச்சை பெறவும், தொழில் முதலீடு தொடர்பாக, பிரபல தொழிலதிபர்களுடன் பேச்சு நடாத்தவும் வெளிநாடு செல்ல ஜெயலலிதா திட்டமிட்டிருந்தார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட நிலையில் மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டபோது அது நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கரி ஊழல்-வழக்கு, கொடைக்கானல் ஓட்டல் வழக்கு, சொத்துக்குவிப்பு வழக்கு என பல வழக்குகளில் மாட்டிக்கொண்டுள்ள ஜெயலலிதா தமிழகத்திலேயே தங்கியிருக்க வேண்டுமென உயர் நீதிமன்றம் நிபந்தனை விதித்திருந்தது.

தற்போது அவர் வெளிநாடு செல்லத் திட்டமிட்டு அதற்கான அனுமதி கோரி மத்திய அரசிற்கு கடிதம் எழுதினார். இதற்கு சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் தனி நீதிமன்றத்தில் உள்ளது. இந்த வழக்கு விரைவாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந் நிலையில் அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்க முடியாது, என மத்திய அரசு பதில் அனுப்பியுள்ளது.

இதையடுத்து "எனக்கு முதுகு வலியும் இல்லை, நான் வெளிநாடு போகவும் இல்லை" என முதல்வர் ஜெயலலிதா பத்திரிகையாளர்களிடம் கூறித் தனது கௌரவத்தைக் காப்பாற்றியுள்ளதாக இணையத்தளச் செய்திகள் கூறுகின்றன.

# வை.கோ.வின் நடைப்பயணத்தைச் சென்னைக்குள் அனுமதித்த பொலிஸ் அதிகாரிஇடமாற்றம்

## ஜெயலலிதா நடவடிக்கை

சுமார் இரண்டாயிரம் பேருடன் நடைப் பயணமாக சென்னை நோக்கி வந்த வை.கோவை சென்னைக்குள் தடையுத்தரவை மீறி அனுமதித்த பொலிஸ் கமிஷனர் நடராஜன் இடம் மாற்றப்பட்டுள்ளார். புதிய கமிஷனராக ஆர்.நடராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை நகருக்குள் வை.கோவின். நடைப்பயணத்திற்கு பொலிஸ் தடை இருந்தும் அதை மீறி அவர் உள்ளே வந்துவிட்ட செய்தி தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியதால் அவர் உள்துறை அதிகாரிகள் மற்றும் உளவுப்பிரிவு அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகளை அழைத்து விளக்கம் கேட்டார்.

இதையடுத்தே வை.கோவை சென்னைக்குள் அனுமதித்த சென்னை நகரமுக்கிய பொலிஸ் அதிகாரிகளை மாற்ற முடிவெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதன் பிரகாரம் தமிழக உள்துறைச் செயலர் ஷீலாராணி சுங்கத் நேற்றிரவு திடீரென்று விடுத்த பத்திரிகை அறிக்கையில் சென்னை மாநகரக் கமிஷனராகப் பணியாற்றிய நடராஜன் மாற்றப்பட்டு மின்வாரிய கூடுதல் டி.ஜி.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக சட்டம், ஒழுங்குப்பிரிவு கூடுதல் டி.ஜி.பியாக பணியாற்றிய ஆர்.நடராஜ் மாநகர பொலிஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னையில் மத்தியஅமைச்சர்அன்புமணி வீட்டுக்கு நேற்று ரெயில்வேத் துறை மந்திரி லல்லுபிரசாத் தமது மனைவி ரப்ரிதேவியுடன் சென்றார். அன்புமணியின் தந்தை டாக்டர் ராமதாஸ் மற்றும் குடும்பத்தினர் உடன் உள்ளனர்.

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 | International Cricket Council | ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 | International Cricket Council | ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004

# பரபரப்பான ஐ.சி.சி. கடைசி லீக்ஆட்டத்தில்

# பாகிஸ்தான் அணி அரையிறுதிக்குத் தெரிவு

ஐ.சி.சி.கிண்ணத்துக்கான இந்திய-பாகிஸ்தானுக்கிடையிலான முக்கியமான நேற்றைய போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தெரிவானது.

இங்கிலாந்தின் எட்பட்சன் மைதானத்



தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி சொற்ப ஓட்டங்களுக்கு முதல் மூன்று முக்கிய விக்கெட்டுக்களை இழந்தது.

தொடர்ந்து ஆடுகளம் நுழைந்த ஹைவ்வும், ராவிட்டும் இணைந்து ஓட்ட எண் ணிக்கையை அதிகரித்த போதும் நிலைத்து நிற்க முடியவில்லை. ஹைவ் 27 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்னர் ராவிட் டுடன் ஜோடி சேர்ந்த ரொகான் கவாஸ்கர் ஓரளவு நிலைத்து நின்று ஆடிய போதும் ஓட்டங்களைக் குவிக்க முடிய வில்லை அப்துல் ரசாக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்த போது அணி 150 ஓட்டங்களைத் தானும் பெறுமா என்ற நிலையில் களம் புகுந்தார் சகலதுறை வீரர் அஜித் அகாக்கர் இவர் ராவிட்டொடு இணைந்து தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் அணியை ஓரளவு கௌரவமான ஓட்ட எண்ணிக்கைக்கு இட்டுச் சென்றார்.

இறுதியில் 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி. துடுப்பாட்டத்தில் ராவிட் 67 ஓட்டங்களையும், அகாக்கர் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அகதர் 4 விக்கெட்டுகளையும், நவீட் உல கசன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் ஆரம்ப இரு விக்கெட்டுகளையும் சொற்ப ஓட்டங்களுக்கு இழந்த போதும் இன்சமாம், யுஹானா ஆகியோரின் நிதானமான துடுப்பாட்டம் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.

இறுதியில் 49.3 ஓவர் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது பாகிஸ்தான். துடுப்பாட்டத்தில் யுஹானா ஆட்டம் இழக்காது 81 ஓட்டங்களையும்,



இன்சமாம் உல்ஹக் 41 ஓட்டங் களையும், அப்ரிடி 12 பந்துகளில் 25 ஓட்டங் களையும் பெற்றனர். பந்து வீச்சில் பதான் மூன்று விக்கெட்டுக களைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப் பாட்டக்காரராக யுஹானா தெரிவானார். மேற்படி தோல்வி இந்திய அணிக்கு பாகிஸ் தானிடம் தொடர்ச்சியாகப் ஏற்பட்ட மூன்றாவது தோல்வியாகும்.

# சர்வான், சந்தர்போல் சிறப்புத் துடுப்பாட்டம்

# அரையிறுதிக்குள் நுழைந்தது மே.இ.தீவு



ஐ.சி.சி கிண்ணத்துக்கான மேற்கிந்தியத் தீவு-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டியில் எதிர்பாராத வெற்றியைப் பெற்ற மேற்கிந்தியத் தீவு அணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

ஆரம்பத்தில் 33 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்த மேற்கிந்தியதீவு அணி சர்வான், சந்தர்போல்,அணித்தலைவர் லாரா ஆகியோரின் சிறப்புத் துடுப்பாட்டத்தின் மூலம் எதிர்பாராத வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

நேற்று முன்தினம் ஓவல் மைதானத்தில் ஆரம்பமான மேற்படி போட்டி அன்றைய தினம் மழையால் இடைநிறுத்தப்பட்டு நேற்று நிறைவு பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 6 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிப்ஸ் 101 ஓட்டங்களையும், சிமித் 45 ஓட்டங்களையும் , ருடெல்வ் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிறிஸ் கெய்ல்ஸ் 50 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 247 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவு 33 ஓட்டங்களுக்கு இரண்டு



விக்கெட்டுக்களை இழந்த போதும், 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



துடுப்பாட்டத்தில் சர்வான் 75 ஓட்டங்களையும், லாரா 49 ஓட்டங்களையும், சந்தர் போல் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பொலக், நிற்றினி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகக்ளைக் கைப்பற்றினர்.

அரையிறுதியில் மேற்கிந்தியத் தீவு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

# 10,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார் இன்சமாம்



சர்வதேச ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

பத்தாயிரம் ஓட்டங்களுக்கு 33 ஓட்டங்கள் தேவையான நிலையில் நேற்று இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 41 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இன்சமாம் உல் ஹக் பத்தாயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். 322 ஒருநாள் போட்டியில் விளையாடியுள்ள இன்சமாம் அதிகூடியஓட்டங்கள் குவித்தவர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார். முதலிடத்தில் நட்சத்திர வீரர் டெண்டுல்கர் உள்ளார்.

# மும்முனைத் தொடரிலும் பாலாஜி அவுட்

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பாலாஜிக்கு இரண்டு மாதம் ஓய்வு வேண்டும் என்பதால், வரும் ஒக்.6 இல் தொடங்கும் அவுஸ்திரேலியத் தொடர் உட்பட நவம்பரில் நடக்க உள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பாலாஜி பங்கேற்க இயலாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பில் இருந்து விரைவில் மீண்டுவிட முடியும் என்று தெரிவிததுள்ள பாலாஜி, “காயத்தால் எனது கிரிக்கெட் வாழ்வு ஒன்றும் முடிந்துவிட வில்லை. ஒரு சிறிய பின்னடைவு-அவ்வளவுதான். வலி நீங்கியதும் மீண்டும் பந்துவீச வருவேன்” என்றார்.

# சர்வதேச சமாதானத்தை வேண்டி நாடு முழுவதும் வீதி ஓட்ட நிகழ்வு

சர்வதேச சமாதானத்தை வேண்டி (A.G.S.C.E.P) ஆசிய ஜேர்மனி விளையாட்டுப் பரிமாற்றத் திட்டத்தினால் இலங்கையில் தேசிய ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட சமாதான வீதிஓட்டநிகழ்வு கண்டியை மையமாக வைத்து நடத்தப்படவுள்ளது. இதன் ஒரு பகுதியாக யாழ்.மாவட்டத்திலிருந்து 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் வீதி ஓட்டம் அதேநாள் காலை கிளிநொச்சியை வந்தடைந்து அங்கிருந்து வவுனியாவைச் சென்றடையும்.


தொடர்ந்து மறுநாள் காலை வவுனியாவில் இருந்து புறப்பட்டு மாத்தளையைச் சென்றடையும்.

26 ஆம் திகதி காலை மாத்தளையில் இருந்து ஆரம்பித்து கண்டியை மதியம் சென்றடைந்து அங்கு தேசிய சமாதானம் தொடர்பான கருந்தரங்குகள் நடைபெறவுள்ளது.

இதே போன்று மன்னார், திருமலை ஆகிய பகுதிகளில் இருந்து சமாதானத்தை வேண்டி நடைபெறும் வீதி ஓட்டம் அன்றையதினமே கண்டியை வந்தடையும்.

இது போன்று இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் சமாதான வீதி ஓட்டங்களை ஆரம்பமாகி கண்டியை வந்தடையவுள்ளன.

# ஒலிம்பியாட் செஸ்போட்டி ஸ்பெயினில் ஒக்ரோபர் 14 இல்



34-ஆவது செஸ் ஒலிம்பியாட்போட்டி ஸ்பெயின் நாட்டில் ஒக்ரோபர் 14 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் 145 நாடுகளில் இருந்து 2,175 வீர-வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள்.

இந்தப் போட்டியில் இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணி பங்கேற்கின்றது. இந்திய ஆண்கள் அணிக்கு ஆனந்த் தலைமை ஏற்கிறார்.



விளையாட்டு

# கபடி பயிற்சிமுகாம் நிறைவும் — சான்றிதழ் வழங்கலும் —

வடக்குக் கிழக்கு மாகாண சபை நிதிஅனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட அலுவலகத் தால் கடந்த 17ஆம் திகதி கபடி விளையாட்டுப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பயிற்சி முகாமில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 40 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் பயிற்சி முகாம் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளா என்.பேரானந்தம் அவர் கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயிற்சியாளருக்கு, ஆலோசனைகள் வழங்கியதுடன் இம் மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு




விளையாட்டு உபகரணங்களும், நூல் நிலையப் புத்தகங்களும் வழங்கினர்.

நேற்று 3 ஆம் நாள் நிகழ்ச்சிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளி.மாவட்ட அதிகாரி எஸ்.எப். ஜேசுதாசன் அவர்களின் தலை மையில் ஆரம்பமாகியது. பயிற்சி முகாம் முடிவில் பயிலுனர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ் வழங்கும் வைபவத் துக்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

விளையாட்டுப் பயிற்சி முகா மின் மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டமான கரப்பந்து விளையாட்டுப்பயிற்சி முகாம் எதிர்வரும 2004.10.01,02,03 ஆம் திகதிகளில் (மூன்று நாட்கள்) தருமபுரம் மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (தீ,ச)

## சிந்தனைக்கு



சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே, எமது அரசியல் இலட்சியமாகும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## மீண்டும் ஆயுதக் கொள்வனவு

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கூற்றுக்களைப் பார்த்தால் மீண்டும் ஒரு ஆயுதக் கொள்வனவிற்கு அரசாங்கம் நிதிஒதுக்கீடு செய்ய வேண்டியதாகியுள்ளது. அதாவது நாட்டில் உள்ள 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவே இந்நிதி ஒதுக்கீடு தேவையாக இருக்கும்.

தென்னிலங்கையில் இன்று கிரிமினல் நடவடிக்கைகள் கட்டுக்கடங்காத வகையில் அதிகரித்துச் செல்கின்றது. கொலைகள், ஆட்கடத்தல், பாலியல் பலாத்காரம் என நாளாந்தம் அச்சுறுத்தும் வகையிலான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. பட்டப்பகலில் பாதாள உலகக் கோஷ்டியினர் வீதிகளில் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

இவற்றில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பில் இருந்து தப்பியோடியவர்களே முக்கியபங்கு வகிக்கின்றனரென்பது சிறிலங்கா அரச தரப்பினால் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தப்பியோடியவர்கள் சுமார் 50,000 இற்கும் மேல் என பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. இதேவேளை 30,000 வரையிலான சட்டவிரோத ஆயுதங்கள் உள்ளதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் சிறிலங்காவில் கொழும்பை மையமாகக் கொண்டு வளர்ந்துள்ள சர்வதேச போதைப்பொருள் கடத்தல், பாதாள உலகக் கோஷ்டியினரின் பல்வேறு வகையிலான நடவடிக்கைகள் என்ற ரீதியில் நிச்சயமாக அரசாங்கத்தின் மதிப்பீட்டைவிட சட்ட விரோத ஆயுதங்களின் தொகை அதிகளவில் இருக்கும் என்றே துணிந்து கூற முடியும்.

ஆகையினால் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் ஆயுதக் கொள்வனவிற்கென ஒதுக்கப்படும் நிதியின் அளவினைத் தற்பொழுது மதிப்பீடு செய்வதென்பது சற்றுக் கடினமாகவே இருக்கும். ஆனால் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் திட்டமானது எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பது குறித்தும் பலமான கேள்வி உண்டு.

ஏனெனில் இன்று சட்டவிரோத ஆயுதங்களைப் பாவனை செய்பவர்கள் தமது தொழில் சார் நடவடிக்கை போன்றதற்கே பயன்படுத்துகின்றனர். அதாவது வேலையற்றவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளுக்கான கருவியாகவே அவற்றைப் பயன்படுத்து கின்றனர். இவற்றைப் பயன்படுத்துவதற்காக இவர்களுக்குப் பெரும் தொகை நிதிவழங்கப் பலர் தயாராகவும் உள்ளனர். ஏனெனில் இன்று நாட்டின் பெரும் புள்ளிகளாகவும், முக்கியஸ்தர்களாகவும் உள்ளவர்களுக்கு இவர்களின் சேவை தேவையாகவுள்ளது.

ஆயுதப்படையில் இருந்து தப்பி ஓடி வரும் போதே, ஆயுதங்களைக் கொண்டு ஓடிவந்திருப்பின் அப்பொழுதே அவற்றைப் பயன்படுத்தி சட்டவிரோத முறையில் பணம் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் கொண்டிருத்தல் வேண்டும். அத்தோடு அவர்களுக்குத் தொழில் முறையில் இதனைத் தவிர வேறு எதுவும் தெரியாது. சுருக்கமாகக் கூறுவதானால் அரசாங்கம் இதனையே அவர்களுக்குப் பயிற்றுவித்தது. இதனைப் பயிற்றுவிப்பதற்கான தகுதி எதனையும் அரசாங்கம் கோரவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான பெரும் யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்ட சிங்கள ஆட்சியாளர்கள், ஆயுதப்படைக்கு ஆளணித் தேவை ஏற்பட்டபோது அடிப்படைத் தகுதிகளோ அன்றி நன்னடத்தை குறித்த எந்தவித ஆய்வுகளோ விசாரணைகளோ அன்றி ஆயுதப்படைக்கு ஆளணியைச் சேர்த்தது. இதன் காரணமாகக் கிரிமினல்கள் கூட அரசாங்கத்திடமிருந்து ஆயுதப்படைப் பயிற்சியை இலகுவாகவும் ஆயுதங்களை இலவசமாகவும் பெறக்கூடியதாக இருந்தது.

இத்தகையவர்கள் ஆயுதப்படைகளில் இருந்து தப்பி ஓடி வந்த போது அவர்களுக்கு ஏற்றவகையிலான கள நிலவரமும் இருந்தது. அதாவது திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக வளர்ந்து வந்த சட்டவிரோத நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஈடுபடவும், அரசியல்வாதிகளின் தேவைகளை நிறைவு செய்யவும், பெருமளவு ஆயுதப்பயிற்சியும், கொடூரச்செயலுக்கு அஞ்சாதவர்களுமான இளைஞர்கள் தேவையாக இருந்தது. அதாவது பெரும் ஊதியத்துடன் இத்தகைய வேலை வாய்ப்புக் காத்திருந்தது. அதன் கவர்ச்சி ஆயுதப்படையில் இருந்தவர்களை மேலும் மேலும் தன்னகத்தே ஈர்க்கும் சக்தி கொண்டதாக இருந்தது. இது அவர்களுக்குச் சட்ட திட்டங்கள், சமூக விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட சுகபோக வாழ்வை வழங்குவதாகவும் இருந்தன.

இந்தவகையில் இன்று ஒரு பெரும் துறை போல் வளர்ந்துவிட்ட இதனைச் சார்ந்தோரிடமிருந்து சட்டவிரோத ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் ஆலோசனைகள் பயன் தரமாட்டாது. ஏனெனில் பிரதிப்பாதுகாப்பமைச்சர் வழங்கும் பணம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமாட்டாது என்பது மட்டுமல்ல, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வழங்கக் கூடிய பணத்தை விட அதிகரித்த தொகையை அவர்கள் உயிர் உள்ளவரை வழங்கி அவர்களை அதே துறையில் வைத்துக்கொள்ள பணபலமும், அதிகாரபலமும் கொண்டவர்கள் பலர் நாட்டில் உள்ளனர்.

# பெற்ற கடனில் ஒருபகுதிக்காக வனவளத்தை பொறுப்பேற்று நிர்வகிக்க அமெரிக்கா விருப்பம்

### சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

இலங்கை பெற்ற கடனுக்காக அமெரிக்கா இலங்கையின் வன வளங்களைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இலங்கை 1300 மில்லியன் டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது. இதில் சுமார் 13 மில்லியன் டொலர்களை இலங்கை தமக்குச் செலுத்தாமல் அதற்குப் பதிலாக நாட்டில் உள்ள பல வனங்களைக் குறிப்பிட்ட காலங்களுக்கு நிர்வகிக்கும் பொறுப்பை, தமது நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்க வேண்டும் என அமெரிக்கா கேட்டுக் கொண்டமைக்கு அமைய, முன்னைய அரசாங்கம் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தது. எனினும் அப்போது எதிர்க்கட்சியாக இருந்து, தற்போதைய அரசாங்கத் தரப்பு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தது. தற்சமயம் அதே கட்சி அந்தத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதனை செயற்படுத்தவுள்ளதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக் குற்றம் சுமத்துகிறது. அந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையில் இருக்கக் கூடிய வனவளங்களின் இயற்கை மூலிகைகள் அனைத்தையும் அமெரிக்கா தமது நாட்டுக்குக் கொண்டு செல்லக் கூடும், எனவும் அந்த அமைப்புத் தெரிவிக்கிறது. அதே நேரம் குறிப்பிட்ட காலம் வரையில் அமெரிக்க நிறுவனத்தின் நிர்வாகத்தில் இலங்கை அரசாங்கம் தலையிட முடியாத நிலை ஏற்படும் எனவும், அந்தச் சுற்றாடல் அமைப்பு எச்சரித்துள்ளது.

## மகிந்த சமரசிங்க— மொறகொட கருத்து முரண்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுபினர்கள் இருவருக்கிடையில் முரண்பாடுகள் குறித்துக் கொழும்பின் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்கவைக் கட்சியின் புனரமைப்புப் பணிகளுக்கு அமைய கொழும்பு மாவட்டப் பொறுப்பாளராக கட்சி நியமித்துள்ளது. இதே வேளை பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட கொழும்பின் கிழக் குப் பிரதேசத்திற்குப் பொறுப்பாக உள்ள அதேநேரம் அவருக்கு அந்தப் பிரதேசங்களில் செல்வாக் குக் காணப்படுகிறது. என்று தெரி விக்கப்படுகிறது. இந்த நிலையில் தமது கொழும்பு மாவட்ட கிழக்கு பிரதேசத்துக்குப் மஹிந்த சம ரசிங்கவைப் பொறுப்பாளராக நிய மிப்பதற்கு மிலிந்த அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிவீக்கப்படுகிறது மஹிந்த சமரசிங்க களுத்துறையைச் சேர்ந்தவர் என்ற போதும் கட்சியின் புதிய முன் னெடுப்பால் அவர் கொழும்பில் இருந்து பாராளுமன்றதிற்குப் போட்டியிடும் வாய்ப்புக் கிட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டதற்குக் கண்டனம்

### விசாரணை நடத்துமாறு மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை ஆணையாளர் சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றும் நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளார். இதனையடுத்துக் கொழும்பு மாநகரசபை சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றும் இந்த நடவடிக்கையினை இடைநிறுத்தியது குறித்து விசாரணை நடத்துமாறு நகரவாசிகள் மாகாண ஆளுனர் அலவி மௌலான மற்றும் முதலமைச்சரிடம் கோரியுள்ளார்கள்.

சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றும் வேலையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு நகரவாசிகள் நகர அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்டுள்ளார்கள்.

இதேவேளை மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட்குரே இது பற்றித் தகவல் தருகையில் சட்டவிரோதக் கட்டடங்களில் உள்ளவர்களுக்கு முன் அறிவித்தலோ அல்லது மாற்று வசதிகளோ எதுவும் செய்து கொடுக்கப்படமாட்டாது. என்று தெரிவித்துள்ளார்.

## களுகங்கை-ஜின்கங்கை பெருக்கெடுப்பு தெற்கில் வெள்ள அபாயம்

கடும் மழை காரணமாக இலங்கையின் மேல் மாகாணப் பகுதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

களுகங்கையும்,ஜின் கங்கையும் பெருக்கெடுத்துள்ளதால் களுத்துறை உட்பட்ட பல பகுதிகளில் வீதிகள் பல வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. மக்களின் குடியிருப்புகள் பாரிய அளவில்

பாதிக்கப்படாவிட்டாலும், மக்கள் அவதான நிலையில் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இந்தப் பகுதிகளில் இந்த வருட ஆரம்பத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பலர் உயிரிழந்தமைமையும் பலர் தமது வீடுகளில் இருந்து வெளியேறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் அகதிகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் நிவாரணப்பொருட்களை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்

# பல்கலை கல்விசாரா ஊழியருக்கு இடைக்காலக் கொடுப்பனவை வழங்க ஏற்பாடு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இந்த வாரத்தில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு முன்னதாக அவர்களுக்கு இடைக்கால கொடுப்பனவை வழங்கஅமைச்சரவை உப குழு தற்சமயம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அமைச்சர்களான லால் காந்த மற்றும் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் தொழிற்சங்கத்துடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் வெற்றியளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த வாரத்தில் இந்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகக் கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் காரணமாக நாட்டில் உள்ளபல்கலைக்கழகங்கள் அனைத்திலும் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் கடந்த மூன்று வாரக்காலமாக ஸ்தம்பித்துள்ளன.

# கோதுமை மா விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்

கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே இதற்கான காரணம் எனப் பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த காலத்தில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்த போதும், கோதுமை மாவின் விலையை நுகர்வோர் நலன் கருதிப் பாரிய அளவில் அதிகரிக்க பிறிமா நிறுவனம் முன்வரவில்லை. எனினும் அரசாங்கம் பிறிமா நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய மானிய நிதியை உரிய முறையில் செலுத்தாமை காரணமாக அந்த நிலைப்பாட்டில் இருந்து, பிறிமா நிறுவனம் விலகிச் செல்ல வேண்டியுள்ளதாகப் பிறிமாவின் சந்தைப்படுத்தல் தலைவர் அப்துல் காதர் தெரிவித்துள்ளார். தற்சமயம் கோதுமை மா ஒரு கிலோ 22 ரூபாவிற்கு விற்பனை செய்யப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## நாடுகடத்தப்படுவதை எதிர்த்து 13 இல.தமிழர் போராட்டம்

அவுஸ்திரேலியாவில் அரசியல் அடைக்கலம் கோரி 13 இலங்கைத் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்க வைக் கப்பட்டுள்ள முகாமில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை நாடுகடத்தும் வகையில் அந்த நாட்டின் அரசாங்கம் முனைப்புகளை மேற்கொண்டு வருகிறது. இதனை ஆட்சேபித்தே குறிப்பிட்ட 13 பேரும் உண்ணா விரதப்போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர்.

(32)

# வயோதிபரின் கொலைதொடர்பாக 9 பேர் மல்லாகம் நீதிமன்றில் சரண்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் புன்னாலைக்கட்டுவன் ஈவினைப்பகுதியினில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட அருணாசலம் முத்தையா (வயது73) என்பவரது மரணம் தொடர்பினில் ஒன்பது பேர் மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்துள்ளனர். கடந்த வியாழன்று சட்டத்தரணி மு.சபாநாதன் மூலமாக எண்மரும் சட்டத்தரணி செல்வி. சாந்தா, அபிமன்னசிங்கம் மூலமாக 9பேர் மல்லாகம் நீதவான் திருமதி.சரோஜினி இளங் கோவன் முன்னிலையில் சரணடைந்துள்ளனர்.

சுன்னாகம் பொலிசாரால் தேடப்படுவதாகக்கூறி நீதிமன்றில் சரணடைந்த இவர்களை எதிர்வரும் 30ஆம் திகதிவரை யாழ்.சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான். தேவையேற்படுமிடத்து இவர்களது வாக்குமூலங்களை சிறைச்சாலையில் வைத்துப் பெற்றுக் கொள்ளவும் பொலிசாருக்கு அனுமதியளித்துள்ளார்.

இதனிடையே நீதிமன்றில் சரணடைந்த சந்தேக நபர்களில் சிலர் பல்கலைக்கழக மாணவர்கள் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை தற்போது கொலை செய்யப்பட்டுள்ள அருணாசலம் முத்தையா மீது கடந்த ஆண்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்று தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணைகளிற்கு உட்படுத்தப்படிருந்த இன்னுமொரு நபரான அ.கனகலிங்கம் என்பவரும் கடந்த 14ஆம் திகதி முதல் யாழ்.சிறைச்சாலையில் மல்லாகம் நீதிமன்றினால் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவருடன் சேர்ந்து 10பேர் யாழ்.சிறையில் இச்சம்பவம் தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் முன்னைய கொலை முயற்சி தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்படிருந்த பல்கலைக்கழக மாணவனொருவர். தலைமறைவாகியிருந்த நிலையில் அவரிற்கெதிராக நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்டிருந்தது.

எனினும் குறித்த பல்கலைக்கழக மாணவனும் தற்போது சட்டத்தரணி மூலமாக நீதிமன்றில் சரணடைந்ததாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயத்தினை அண்டியுள்ள ஈவினைப்பகுதியில் வைத்து இரவுவேளை சுட்டுக்கொல்லப்பட்ட குறித்த நபரது மகளால் வழங்கப்பட்ட வாக்குமூலமொன்றினை அடிப்படையாக வைத்தே பொலிசார் சந்தேக நபர்களைத் தேடி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## "திருக்குமரன் கவிதைகள்" நூல் நேற்று வெளியீடு

"திருக்குமரன் கவிதைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இந் நூலின் முதற் பிரதியினை கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் வெளியிட்டுவைக்க, யாழ். இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபர் க.சிவராமலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## வீதிக்குக் குறுக்கே மரம் போக்குவரத்துப் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிவநகர், சிவன்சோலைக் கிராமத்தில் சிவன்கோவிலடியில் வீதிக்கு அருகில் நின்ற பாலை மரம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி அன்று வீதியைக் குறுக்கறுத்து விழுந்துள்ளது. இது இன்னும் வீதியை விட்டு அகற்றப்படாத நிலையில் உள்ளதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

சிவன்சோலைக் கிராமத்தில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லைச் சந்தப்படுத்துவதற்காகச் செல்லும் பாரஊர்திகளும், நாளாந்தம் இப் பாதையினூடாகச் செல்லும் சிவன்சோலைக் கிராம மக்களும் பல மைல்கள் சுற்றிச் சென்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்கள். இந்த மரம் அகற்றப்படாததால் மக்களின் வீதிப் போக்கு வரத்துக்கு மிகவும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக மரத்தை வீதியைவிட்டு அகற்றுவதற்கான ஒழுங்கினைச் செய்து தருமாறு சம்பந்தப்பட்டோரைச் சிவன்சோலைக் கிராமமக்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். (தீ.ச)

## திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

சேமமடு விபுலானந்தர் முன்பள்ளி புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பெற்ற விபுலானந்தர் முன்பள்ளி புதிய கட்டடத்திறப்பு விழாவில் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களைக் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் திறப்பு விழா ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## கணினிப் பயிற்சியைப் பூர்த்தி செய்த 355 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது

(அலவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற கணினிப் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆகியோர் ஏற்றி வைத்தனர். தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை கிளி. அரசஅதிபர், தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கியதுடன்,பயிற்சியை நிறைவு செய்தவர்களில் ஒரு பகுதியினருக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். அடுத்து




கிளி.மாவட்டத் தலைவர் கார்த்திகேசு தலைமையில் நேற்று காலை 9.00 மணிக்குஆரம்பமான மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைக்க செஞ்சிலுவைச் சங்கக் கொடியினை கிளி. மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஏற்றிவைத்தார்.தொடர்ந்து மங்கள விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் பாலராஜ் ஆகியோர் ஏற்றிவைக்க பொதுச்சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், கிளி.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன் பகல் 11.00 மணிக்கு இரண்டாவது பகுதியாகச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. கரைச்சிக் கோட்ட கல்விப்பணிப்பாளர் திருமதி அரியரத்தினம் நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். மற்றும் கல்லூரி அதிபர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு கணி னிப்பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர்.

கணினிப் பயிற்சியினை மூத்த விரிவுரையாளர் எஸ்.வி. சதீஸ் குமார்,விரிவுரையாளர் பி.பார்த்தீபன் ஆகியோர் வழங்கியமையும் இப் பயிற்சியினை 355 பேர் நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## வித்துடல் விதைப்பு

கடந்த வியாழக்கிழமை அன்று பளைப்பகுதியில் ஏற்பட்ட தவறுதலான விபத்தின் போது வீரகாவியமான கப்டன் இளங்கோவன்-சுப்பையா. குகநாதன் (அல்லது நாதன்) என்ற மாவீரரின் வித்துடல் நேற்று முன்தினம் அவரது வீட்டிலிருந்து அவர் கல்வி கற்ற பாடசாலையான கிளி.இந்துக் கல்லூரிக்கு எடுத்துச்செல்லப் பட்டது. அங்கு அஞ்சலி நிகழ்வுக்காக வைக்கப்பட்ட வேளையில் அவரது வித்துடலுக்கு பொதுச்சுடரினை பாடசாலை அதிபர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அவரது வித்துடலுக்கு பெற்றோர் மலர் மாலை அணிவித்தனர்.

அவரது படையணியைச் சேர்ந்த ப.இளம்பருதி, கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தியதையடுத்து கவிதாஞ்சலி ஒன்று வாசிக்கப்பட்டது. கவிதையை போராளி கருநம்பி வாசித்தார். பின்பு போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பின்பு வித்துடல் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் 4.45 மணிக்கு விதைக்கப்பட்டது.

## மின்னல் தாக்கியதால் பிரமந்தனாறில் வீடு சேதம்

(கண்டாவளை)

விசுவமடு, பிரமந்தனாறு பகுதியில் மின்னல் தாக்கியதால் வீடு ஒன்று சேதமடைந்ததுடன் அதில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலமும் செயலிழந்துள்ளது.

பிரமந்தனாறு 33ஆம் வாய்க்காலைச் சேர்ந்த பரமானந்தம், சுந்தரலிங்கம் என்பவரது வீடே சேதமடைந்தது. இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கடும் மழையின் போது இடம்பெற்றுள்ளது. இதன்போது சிறுவன் ஒருவன் மின்னல் அச்சம் காரணமாக வீட்டுச்சுவர் மூலையில் பதுங்கியிருந்த போது நான்கு அடிதூரத்தில் உள்ள மண்சுவர் பாதிக்கப்பட்டது. சிறுவன் மயிரிழையில் உயிர் தப்பினான். (14)

## சவுக்கடி படுகொலையின் 14ஆவது ஆண்டு நினைவுநாள்

கடந்த 1990ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினராலும், ஊர்காவற் படையினராலும் ஏறாவூர் சவுக்கடி கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட 42 அப்பாவித் தமிழ் மக்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந் நினைவு நாளை முன்னிட்டு சவுக்கடி கிறிஸ்தவ தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன், சவுக்கடி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடும் நடைபெறும். அத்துடன் சவுக்கடி கிறிஸ்தவ தேவாலயத்தில் அன்னதானமும் வழங்கப்படும்.

## மீனவருக்கு பயிற்சி

உலக உணவுத்திட்டத்தின் ஏற்பாட்டில் குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மூவருக்குக்கரையோர மீன்பிடி தொடர்பான பயிற்சிகள் வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்படும் மூன்று மீனவர்களுக்கே இப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்தோனேசியா நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ள இவர்களிற்கு வதிவிடப் பயிற்சியும், மீன்பிடிப்படகுகள் தொடர்பான பயிற்சிகளும் வழங்க ஏற்பாடாகியுள்ளது. (27)

## கமுனுகம....

சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை நேற்றிரவு பொறள்ளையில் பாதாள உலக கோஷ்டிகளிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

## பு கள்....

யப்பு உள்ளதாகத் தெரிவித்தார். இதேவேளை இந்தியாவிடம் இருந்து இலங்கைக் கடற்படை 20 கோடி ரூபா கடன் அடிப்படையில் கரையோரப் பாதுகாப்புக்கடற்கலம் ஒன்றைக் கொள்வனவு செய்யவுள்ளதாக ஏற்கனவே தகவல் ஒன்று வெளியாகியுள்ளமை தெரிந்ததே.

## தற்போதைய....

கட்டுப்படுத்த வெளிநாடுகளின் உதவியுடன் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்து நுகர்வோரின் இடர் தீர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை அமரர் ஹொப்பேக்கடுவவின் கொள்கைகளை முறையாகப் பின்பற்றியிருந்தால் தற்போது ஏற்பட்டு இருக்கும் நிலை ஏற்பட்டு இருக்காது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்...

தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் நேற்று இத்தாலி நாட்டில் ஜாதிக ஹெல உறுமய மாநாடு ஒன்றை நடத்தியது. இதுவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாநாடாகவே அமைந்திருந்தது. (32)

## இலங்கையின்....

அதன் பின்பாகத் தடைப்பட்ட சமாதானப் பேச்சை மீள ஆரம்பிக்கப் போவதாகக் கூறி வருகின்ற போதும், அதற்கான ஆர்வத்தையோ அல்லது பயன்தரும் செயலூக்கமுள்ள நடவடிக்கைகளையோ எடுக்கவில்லை. இந்த நிலையில் அவரது செயற்பாடுகளை எப்படிப் புரிந்து கொள்வதென விடுதலைப்புலிகளின் சமாதானச்செயலகம் குற்றம் சாட்டியுள்ளது. இந்த நிலையில் இடைக்காலத் தன்னாட்சிக் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கி நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதனூடாக சாதாரண நிலையை ஏற்படுத்த வேண்டும் என விடுதலைப் புலிகள் கோரியிருந்ததாகச் சுட்டிக காட்டப்பட்டுள்ளது. இத்தகைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தியாக்குவதன் ஊடான சிறந்த அத்திவாரத்தைக் கட்டி எழுப்பிய பின் இறுதித் தீர்வுக்கான அரசியல் தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்திருந்தமை மீள் நினைவூட்டப்பட்டுள்ளது. இதனை விடுத்து சனாதிபதியும் அவரது அரசாங்கமும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.